வாரப்பதிப்பு விலை சதம் 20

இலங்கைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்



மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 1991 ஆடி திங்கள் 9ம் நாள் (24—7—60) ஞாயிற்றுக்கிழமை முஹர்ரம் 29 | இதழ் 8

# வடக்கிலும் கிழக்கிலும் 16 தமிழரசு வெற்றி

## ஆதரவாளர்கள் இருவரும் தேர்ந் தெடுக்கப் பட்டனர்

## இவர்களிலும் அகில இலங்கை 'மெஜாரிட்டி' பெற்றவர்கள் பலர்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் 19 தொகுதிகளில் போட்டியிட்ட 20 தமிழரசு அபேட்சகர்களுள் 16 பேர் வெற்றிபெற்றனர். நிந்தவூர், பொத்துவில் ஆகிய தொகுதிகளில் தமிழரசு ஆதரவுடன் போட்டியிட்ட இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மொத்தமுள்ள 18 பேரிலும் பலர் அதிக 'மெஜாரிட்டி' எடுத்திருக்கிறார்கள்.

கடந்த மார்ச் தேர்தலில் 15 ஸ்தானங்களைக் கைப்பற்றிய தமிழரசுக் கட்சி இம்முறை அவற்றைப் பாதுகாத்து இன்னும் மேலதிகமாக ஒரு ஸ்தானத்தையும் ஆதரவாளர்கள் ஸ்தானங்கள் இரண்டையும் பிடித்திருக்கிறது.

தமிழ்ப் பிரதேசத்தில் போட்டியிட்ட அபேட்சகர்களதும் அவர்கள் பெற்ற வாக்குகளதும் விபரம் இங்கே தரப்படுகிறது:—

### காங்கேசன்துறை



திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் (தமிழரசு) 15,668

திரு. ஆர். என். செப்பிரகாசம் (த. கா.) 2,099

அதிகப்படியானவை 13,559

### திருகோணமலை



திரு. என். ஆர். இராஜவரோதயம் (தமிழரசு) 8,649

திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி (சு. க.) 4,614

திரு. கே. பி ஆரியதாச (எம் ஈ. பி.) 67

அதிகப்படியானவை 4,038

### நல்லூர்



டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் (தமிழரசு) 11,728

திரு. சி. அருளம்பலம் (தமிழ் காங்கிரஸ்) 6,195

அதிகப்படியானவை 5,533

### ஊர்காவற்றுறை



திரு. வி. ஏ. கந்தையா (தமிழரசு) 12,110

திரு. எஸ். சேனாதிராசா (தமிழ் காங்கிரஸ்) 2,671

அதிகப்படியானவை 9,239

### வட்டுக்கோட்டை



திரு. ஏ. அமிர்தலிங்கம் (தமிழரசு) 13,464

திரு. ஏ. வைத்திலிங்கம் (கொம்யுனிஸ்ட்) 5,206

அதிகப்படியானவை 8,258

### மட்டக்களப்பு
(இரு அங்கத்தவர்)



திரு. செ. இராசதுரை (தமிழரசு) 29,863

ஜனாப். ஏ. எச். மாக்கான் மாக்கார் (யு. என். பி.) 22,031

திரு. கே. என். குமாரசாமி (தமிழ் காங்கிரஸ்) 3,300

ஜனாப். ஏ. எல். சின்னலெவ்வை (தமிழரசு) 2,464

அதிகப்படியானவை 7,222

# சுதந்திரன் சொன்னால் சொன்னதுதான்-தப்பாது

## யு. என். பிக்கு ஒற்றை அங்கத்தவர் தொகுதிகளில் 29 ஸ்தானங்கள்

**யு. என். பி.** ஜூலைப் பொதுத் தேர்தலில் படுதோல்வி அடையப் போகிறது என்றும் அதனால் அரசாங்கத்தை அமைக்க முடியாது போகும் என்றும் தலைமீழாக நின்று கூத்தாடினாலும் ஒற்றை அங்கத்தவர் தொகுதிகளில் 29 பேரைவிட ஒருவர்தானும் அதிகப்படியாகத் தெரிவு செய்யப்பட மாட்டார்கள் என்றும் சுதந்திரனில் கடந்த மாதம் வெளியிட்ட கருத்து வழக்கம் போல் நூற்றுக்கு நூறு வீதம் சரியாகிவிட்டது.

"யு. என். பி.யின் வீழ்ச்சிப் படலம் வரப்போகிறது என்று மார்ச் தேர்தல் முடிவுகளை வைத்துக் கணித்து புள்ளிவிவரம் சகிதம் அறுதியிட்டுக் கூறியவர் உரும்பிராய் திரு. செ. அழகரத்தினம் ஆவர்.

"யு. என். பி.க்கு மூன்று லட்சம் வாக்குகள் அதிகப்படியாகவேண்டும்—முந்திய 50 ஸ்தானங்களைப் பாதுகாக்கவே இந்த நிலைமையானல் வெற்றி இனி வெறுங் கனவு" என்ற தலைப்பில் 5-6-60 சுதந்திரனில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:—

"ஜூலை பொதுத் தேர்தலில் யு. என். பி. அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றி அரசாங்கத்தை அமைக்க முடியுமா? முடியாது. முந்திய மார்ச் தேர்தலில் பெற்ற 50 ஸ்தானங்களைக் காப்பாற்றிக் கொள்ளவே அது எதிர்வரும் தேர்தலில் 3 லட்சம் வாக்குகள் முன்னரைக் காட்டிலும் அதிகப்படியாகப் பெற வேண்டும். அதுவும் முடியாது.

"யு. என். பி.க்கு முன்னரைக் காட்டிலும் 5 சதவிகித வாக்குகள் அதிகப்படியாகக் கிடைக்கும் என்று வைத்துக் கொண்டாலும் ஒற்றை அங்கத்தவர் தொகுதிகளில் 29க்கு அதிகமாக அதனால் ஒரு ஸ்தானத்தைக் கூடப் பெற முடியாது."

இது இம்மியும் பிசகாமல் அச்சொட்டாக நடந்து விட்டது. ஒற்றை அங்கத்தவர் தொகுதிகளில் யு. என். பி. 29 ஸ்தானங்களையே பெற்றிருக்கிறது. இரட்டை அங்

(8-ம் பக்கம் பார்க்க)

தொய்வு (ASTHMA) சங்காரி

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(RICHELET'S PECTORAL)



* இடைவிடாத இருமல்
* இளைப்பு
* மூச்சுத் திணறல்
* கிர் புர் சத்தம்
* நெஞ்சு வலி
* தொண்டை வலி




இவைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. ஈளை நோயினால் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன்: 2885)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊவா மாகாணத்தில் வள்ளுவர் விழா

"திருவள்ளுவர் விருந்தும் மருந்தும் தருகிருர். அளவறிந்து, பக்குவம் தெரிந்து பாங்காகத் தருகிருர். திருக்குறளிலே யே இரண்டும் உண்டு. விருந்தை அளவோடு பாவிக்க வேண்டும். அளவு மீறிப் பாவித்து அதால் துன்பம் ஏற்பட்டால் மருத்துவர் வள்ளுவரது திருக்குறளே அதற்கும் மருந்தாக அமையும்"—இவ்வாறு திரு ஆ. கல்யாண சுந்தரேசன் கூறினர்.

ஊவா மாகாணத் தமிழ்ச் சங்கம் அனுசரணையில் பதுளை நகரசபை மண்டபத்தில் திரு இ. சபாரத்தினம் தலைமையில் வள்ளுவர் விழாக் கொண்டாடிய போது திரு கல்யாணசுந்தரேசன் "வள்ளுவரின் விருந்தும் மருந்தும்" என்ற தலைப்பில் பேசினர். விழாவில் மற்றும் பலரும் பேசினர்கள்.


**தமிழ் G. C. E.**

**101 வினுவிடை**

பரீட்சையில் சித்தி தவிர்வதியைப் பொறுத்ததல்ல வினுக்களுக்கு ஏற்ற விடை எழுதுவதில் தங்கியுள்ளது. பரீட்சைக்கு விடை எழுதும் முறைகளுடன் கூடிய புத்தகங்கள் உங்கட்கும் சித்தியைத் தரவல்லன

| | |
|---|---|
| o தமிழ்ப் பாஷை | ரூ 3-00 |
| o எண் கணிதம் | ரூ 3-00 |
| o குடியியல் | ரூ 3-00 |
| o சரித்திரம் | ரூ 3-00 |
| o பூமிசாஸ்திரம் | ரூ 3-00 |
| o சுகாதாரம் | ரூ 3-00 |
| o ஆங்கிலம் | ரூ 3-00 |
| o பயிற்சிச் சிங்களம் | ரூ 3-00 |
| o றோமன் கத்தோலிக்கம் | ரூ 3-00 |
| o இந்து சமயம் | ரூ 3-00 |

**பரீட்சை துணை நூல்கள்**

**கடந்த கால வினு விடைகள்**

பரீட்சை வினுக்களை அறிந்து விடைகளைப் படிப்பது சிறந்த பாடாயத்தமாகும். மாதிரி வினுவிடைகள் சித்திக்கு வழிகாட்டும்.

| | |
|---|---|
| o தமிழ்ப் பாஷை | ரூ 3-00 |
| o எண் கணிதம் | ரூ 3-00 |
| o குடியியல் | ரூ 3-00 |
| o சரித்திரம் | ரூ 3-00 |
| o பூமிசாஸ்திரம் | ரூ 3-00 |
| o சுகாதாரம் | ரூ 3-00 |
| o ஆங்கிலம் | ரூ 3-00 |
| o பயிற்சிச் சிங்களம் | ரூ 3-00 |
| o றோமன் கத்தோலிக்கம் | ரூ 3-00 |
| o இந்து சமயம் | ரூ 3-00 |
| o இஸ்லாம் | ரூ 3-00 |

வி. பி. பி. இடையாது

தபால் செலவு 35 சதம்

விபரங்கட்கு:

**அர்லிஸ் ஷோல்,**
723, மருதானை ரோட்,
கொழும்பு.


# தவத்திரு விபுலாநந்த அடிகளாரின் யாழ் நூல் அரங்கேற்றம்

ஈழம் தந்த நல்ல தமிழறிஞர்களுள் ஒருவர் விபுலாநந்த அடிகளார். துறவு பூண்டு சமூகத் தொண்டுக்கும் தமிழ்ப் பணிக்கும் தம்மை அர்ப்பணித்த கர்மவீரர் அவர். யாழ் நூல் தந்த வித்தகர்.



அடிகளாரின் தோற்றம் 27—3—1892. மறைவு 19—7—1947. கடந்த 19-ந் தேதி அடிகளாரை எங்கும் நினைவு கூர்ந்தார்கள்.

இதையொட்டி தேசியக் கவி 'பரமஹம்ஸதாசன்' எழுதிய 'வாழ்வு மலர்ந்தது' என்ற இக் கவிதையை இங்கு வெளியிடுகிறேம்.

பொங்கும் எழிற் திருமுகத்தில், உவகை, தெம்பு,
புத்தமைதி நகைபொலியத் தமிழணங்கு,
தன்கிழக்குத் திசைநோக்கி நிமிர்ந்தாள்; ஆங்கு
தகதகெனும் மேனியுடன், ஆயிரம்பொற்
செங்கரங்கள் வீசி,இளம் பரிதி, மெல்லத்
திரைகடலைத் தழுவிமகிழ்ந் தெழுந்தான்! ஆழி
நங்கை,அந்த வேளையிலும் அமைதி யின்றி,
நாற்றிசையும் அலைந்துமிக நலிவு கொண்டாள்! 1

பூரித்த பேரின்பத் தமிழ்த்தாய் கண்கள்,
பொருமையலை யுமிழ்கடல்மேற் பொருந்த, அன்னுள்
சீர்வதனம் உதிர்த்ததொரு ஏளனப் புன்
சிரிப்பதனை; அதைக்கண்ட திரையாள், பொங்கி
ஆர்ப்பரித்துக் கொக்கரித்தாள், மேலும்; அன்னை
அகங்குமுற, முகமலர்வாய் அசைத்தாள்: "ஏடி,
பேராசை வெறிபிடித்த கடல்நங் காய்! நின்
பேயாட்டத் தால்விளைந்த இடர்போ தாதோ? 2

சங்கம்வைத்து மொழிவளர்த்துத் தரணி போற்றத்
தனியரசு புரிந்த, என தருமை நாடு,
பங்கமுறக் குமரிகண்டப் பரப்பை யுண்டுன்
பசிதணித்தாய், பல்காலும் பண்டை நெடுந்தே!
மங்காப் பேரிசை,கூத்து, வரி,வெண் டாளி,
மாகுருகு, முதுநாரை போன்ற எண்ணில்
இங்கித நல் இசைநூல்,பண் இலக்கி யத்தை
ஏப்பமிட்டாய்! அதன் இனிமை நீ காண் பாயோ?" 3

குளிர்மொழியாள், கனலுமிழும் பெருமூச் சோடு
கூறுகின்ருள், மேலும்:"அடி, கொடிய பாவி;
பழிகாரி! காலமெலாம் ஓலமிட்டுப்
பதைப்பதலால், எழிலிசைத்தேன் பருகும் பண்பு
நலம்உன்பால் ஏது?உண்டேல், இசைகட் கெல்லாம்
நாயகியாம் எனதருமை நளின யாழை,
விழுங்குவையோ, சண்டாளி? அதற்கீ டுண்டோ
வியன்புவியில்? தொலைத்தாய்நீ! ஆயினும்...என்?" 4

முகம்வெளிர நுரையுமிழ்ந்தும், கரையை முட்டி
மோதி,ஏதோ முணுமுணுத்தாள் கடலணங்கு:
"வெகுண்டுபல புகன்றிடினும், மறைந்த யாழ்தான்
மீண்டுன்பால் வருவதுண்டோ?" என்றுள் போலும்!
"அகந்தைகொளேல்; இருந்துபார், பேதாய்! இன்னும்
ஐந்து,பத்து ஆண்டில்,என்பே ரமுத யாழ்,இச்
சகந்தனில்மீண் டினிதொலிக்கும்; உண்மை! இன்றென்
தனிமகிழ்வால் கண்டுணர்க:" என்றுள் அன்னை! 5

தீர்க்கமொடு இதைத்தமிழ்த்தாய் புகன்ற போது,
திகழ்ஈழத் தமிழகத்தின் கிழக்கில், பண்பால்
ஆர்க்குமெழிற் காரேறு மூதூர் தன்னில்,
அருள்தவழும் மனையொன்றில், ஆனந் தத்தேன்
வார்க்குமொரு கனிமழலைக் குரல்; "சரிக
மாபதநி" என,சப்த ஸ்வரங்க ளோடு!
நோக்கியவர் கண்டுரைத்தார், "விபுலா னந்த
நுண்கலைஞன் தோன்றிவிட்டான்." என,மகிழ்ந்தே! 6

விசையாய்ப்பின் அரைநூற்ருண் டுருண்டு செல்ல,
விளைந்ததொரு சுபதினத்தில், சுபநல் வேளை!
"நிசரி,கா கம,மபத நீநி சா,ச
ரிக,மாம பா,பதநி சாச ரீ"என்(று)
இசையமுதத் தென்றலொன்று வந்து, காதில்
இன்பத்தேன் பாய்ச்சியது; இனிய நாதத்
திசைநோக்கி விரைந்திட்டாள் தமிழ்த்தாய்;நெஞ்சைத்
தெவிட்டாத சுவைக்கடலில் திளைக்க விட்டே! 7

செந்தமிழர் திருநாட்டில், அருள் வழங்கும்
திருக்கொள்ளம் புத்தூர்ச் சிவாலயத்தில்,
கந்தமலர்த் தோரணங்கள், கமழ்தூ பங்கள்,
கனகமணித் தீபங்கள் கவின் பரப்ப,
அந்தமிலாக் கூத்தர்பிரான், என்று மில்லா
ஆனந்த முறுவலுடன், அருகிற் சார்ந்த
பைந்தமிழ்த்தீம் புதல்வித்தை அரவ ணைத்து,உன்
"பழம்பெருமை மலர்ந்த"தெனப் பகர்ந்தான், ஆசி! 8

சந்நிதியின் முன்றிலிலே, அலங்க ரித்த
தண்ணெழிற்பூம் பந்தலின்கீழ், மேடை மீது,
இன்னிசைஞர், நுண்ணறிஞர், எழில்நா வேந்தர்,
இனியதமிழ்ப் பாவலர்,கா வலர்கள் சூழப்,
பண்ணிசைக்கும் நுண்கருவி மணிகள், பாங்காய்ப்
பலவிருக்கக் கண்டதமிழ் மக்கள் பல்லோர்,
எண்ணரிய வியப்பொடு,இப் புதுவாத் யங்கள்
ஏது? இதன் பேர் யாது? எனக்கேட் டியம்பி நின்ருர்! 9

தமிழ்க்கன்னி தளிர்[illegible] வருடப் பெற்ற
தண்ணமைதி யாழ்,இவர்தம் [illegible] கண்டு

குமுறியது: 'இசைத்தமிழர் குலத் துதித்த
கொற்றவனே! இவையுனக்குப் புதிதா, என்ன?
அமைதியொடு ஆழ்ந்துன்னிப் பார்நீ; உன்றன்
அரியபழந் தமிழ்வாத்யம் அன்றே, யாவும்?
நிமிர்ந்துலகில் விசும்புமுட்ட வளர்ந்திருந்த,
நின்தமிழ்த்தாய் புகழை, இன்று மறந்தா போனுய்? 10

வல்லரசாய் இன்றுதிகழ் மேலை நாட்டார்,
வதியுமிடம், உடையுணவு வகைகா ணுது,
அல்லலுற்ற அந்நாளில், உன்முன் ஞேர்,விண்
ணகம் தாவிக் கோள்நிலைகள் அளந்துரைத்தார்;
நல்லகுளம், நதி,கோட்டை, கொத்த ளங்கள்,
நான்மாடக் கூடகோ புரம் சமைத்தார்;
வில்,வாள்,வேற் படையேந்தி, இமயம் முட்ட
வீரப்போர் புரிந்தழியா வெற்றி கண்டார்! 11

ஏழுமுதற் சீனம்வரை வணிகம் செய்தார்;
எல்லையற்ற கடலலைமேற் கப்பல் விட்டார்;
கோலமிகு சித்திரம், நற்கவிதை, சிற்பம்,
குலவுமெழிற் பரதம், இசைக் கலைகள் யாவும்,
சீலமுடன் வளர்த்துநிலை யற்றுவகில் வாழ்ந்தார்,
செந்தமிழர் அன்றே! ஆம், அவர்தம் இன்ப
யாழ்மகனே யான்;எனது அசைவிற் கேற்ப
இசைபாடி, நடமாடி இன்பம் துய்த்தார்! 12

சிலம்பெனும்நின் அருந்தமிழ்நூல் கற்றி லாயோ?
செழுந்தமிழா! பழந்தமிழர் சிறந்த வாழ்வின்
நலந்தெரிவாய், அதில்;கலையில், மொழியில்,பண்பில்,
நல்லறத்தில், அறிவாற்றல், அருளில் எல்லாம்,
வளஞ்செறிந்த மரபினன்நீ; உனை மறந்து
வாழ்கின்ருய், இன்று;பல நூற்ருண் டின்முன்
இலங்கிய,எந் தனையுணரும் வலிமை உன்பால்
எங்கிருக்கும்? சென்றதற்கு இனி வருந்தேல்! 13

காலமெனும் ஆழ்கடலுள் மறைந்த என்னைக்
கண்டெடுத்துப் புவியின்று காண வைத்த
சீலமிகு பெரும்புலவன் தனையே னும்,நீ
தெரிந்துகொள்க! கைலைமலை செம்மல் நெஞ்சை
ஏழிசையாக் உருகவைத்து, "இராவ ணீயம்"
எனும்இசைநூல் தந்தஇலங் கேசன் வாழ்ந்த,
ஈழமணித் தமிழகத்தின்; புதல்வன்; ஞானி,
இனிய'விபு லானந்தன்" இவன்பேர்! காண்க! 14

மங்கலயாழ் இசைக்குரலில் திளைத்திருந்த
மக்கள்குழாம், கண்விழித்து மகிழ்வு பொங்க,
இங்கித நற் பெருமக்கள் புடையிற் சூழ
இனிதமர்ந்த திருவுருவை, நனிநோக் கிற்று!
தங்கமலர்ச் சரம்புனைந்த குஞ்ச ரம்போல்,
தளிர்நீல மேனியிலே, காவி போர்த்த
துங்கவிபு லானந்தன் முறுவல் சிந்த,
துய்யவிழிச் சுடர்கள்,ஏதோ சொல்லிற் றம்மா! 15

"சாதுவெனத் தோற்றுமிவர் மேன்மை, கூறும்
தரமன்று! வடமொழியில், ஆங்கி லத்தில்,
சீதளச்செந் தமிழிலெலாம் வலிமை மிக்க
செம்புலவன்; கணிதத்தில் தேர்ந்த மேதை;
வேதாந்த சித்தாந்தக் கடல் திளைத்தோன்;
வியத்தகுபல் கலைக்கழக வேந்தாய் வாழ்ந்தோன்;
பூதவுடம் பொடுகைலை சென்று மீண்டோன்;
புகழ்பரம ஹம்ஸரருட் போதம் துய்த்தோன்! 16

சிலம்பொலியில் அமிழ்ந்தொரு மகாம கத்தில்
செய்தவத்தால், தெய்வீகத் தமிழ ணங்கின்
இழந்தஇசை யாழ் மீட்டி, யாழ்நூல் ஒன்றும்
இனிதாக்கி,அரங்கேற்றற் கெழுந்தான்" என்று,
களங்கமறும் அவன்விழிகள் கழற, மக்கள்
களிபொங்கிக் கரைபுரளும் கடல்போல் ஆர்த்து
முழங்கினர்விண் ணதிர்ந்திடவே, "விபுலா னந்த
முனிவாழ்க, தமிழன்னை வாழ்க!" வென்றே! 17

மத்தளவாத் தியமுழங்கக் கணக ணென்ற
மணி,முரசின் ஒலிமுழங்க, மலர்த்தார் பொங்க,
வித்தகப்பொன் ஞரத்தி வட்டம் சூழ,
விதவிதமாய் மணம்பரவத் திலக மிட்டு,
முத்தமிழ்த்தாய் முன்"யாழ்நூல்" அரங்கே றிற்று;
முழங்கியநல் வாழ்த்தொலியும் விண்மோ திற்று!
சித்தமகிழ்ந் தாள்தமிழ்த்தாய், புதுவாழ் வீந்த
செப்பரிய சான்ருேனை ஈன்ருே மென்றே! 18

(திரு. எஸ். டி. சிவநாயகம் எழுதிய "அடிகளார் தோற்றமும் யாழ் அரங்கேற்றமும்" என்ற கட்டுரையின் தழுவல் இக்கவிதை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அ. குமாரசாமி, கொக்குவில்

கே: நமது புகைவண்டிப் பெட்டியில் வானொலி பொருத்திலை பிரயாணிகளுக்கு அலுப்புத் தோன்றுதல்லவா?

ப: நல்லயோசனை தான்! ஆனால் "இலங்கை வானொலியின் இரைச்சலைவிட இலங்கை அரசாங்கப் புகை வண்டியின் இரைச்சல் ஆறுதலாக இருக்கிறது. வானொலி வைத்து விட்டால் அப்புறம் 'ஆஸ்பிரோ'வும் விற்பனவு செய்யக் கடையும் வைக்க வேண்டுமே" என்கிறார் ஒரு ரயில் பிரயாணி.

ஃ

பொ. விநாயகமூர்த்தி, காரைதீவு

கே: மாஜி பொதுத்துறையில் விரிவிதியும் மாஜி நிதி மந்திரியுமான ஜனாப் எம். எம். முஸ்தபா இப்போது என்ன செய்கிறார்?

ப: கழிவிரக்கப்படுகிறார்! 'பெரிய மடைத்தனம் செய்து விட்டேன், என் மாமா காரியப்பரின் மோட்டுப் புத்தியைக் கேட்டு விட்டேன். நான் மட்டும் தமிழரசுக் கட்சியில் நிலையாக நின்றிருந்தால் உயிருள்ளவரை என்னை பொத்துவில் அங்கத்தவர் பதவியிலிருந்து யாரும் அசைத்திருக்க முடியாது" என்று முஸ்தபா பல தன்பர்களிடம் வாய் விட்டுச் சொல்லிப் பச்சதாபப் படுகிறார் என்று தெரிகிறது.

க. தாமோதரம், காரைதீவு

கே: குலத்துக் குரிய குணங்கள் எவை?

ப: குணங்கள் அல்ல; குணம் ஒன்றே ஒன்று தான், இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்.

கே: கடவுள் சொல்ல அவரது அடியார்கள் வேதங்களை எழுதினார்கள் என்பது உண்மையா?

ப: அப்படியானால் அடியார்களில் ஸ்டெனோகிராபர்கள்—அதாவது தட்டெழுத்தாளர்களும் சுருக்கெழுத்தாளர்களும் பலர் இருந்திருப்பார்கள் போல் தெரிகிறது.

ஃ

ச. ஆறுமுகம், கிளிநொச்சி

கே: துறவிகள் எனப்படுவோர் ஏன் ...படி உணர்க்கின்றனர்?

ப: தாடி நீண்டு வளர்ந்தால் நெஞ்சை மறைக்கிறது. நெஞ்சின் உள்ளே எழும் ஆசைகளையும் மறைக்க அது உதவும் என்று துறவிகள் நினைக்கிறார்கள்.

ஃ

மு. கனகராஜா, மத்துகமம்

கே: ஜெயரத்தினம் என்ற பெயரைத் தமிழாக்குங்கள்.

ப: வெற்றி மணி.

ஃ

க. விநாயகமூர்த்தி, வல்வெட்டி

கே: ஒரு கணவனுக்கு வேண்டிய முக்கியமான நல்ல குணங்கள் இரண்டைக் கூறுங்கள்.

ப: ஒன்று, மனைவி எது சொன்னாலும் எதிர்த்துப் பேசக்கூடாது இரண்டு, மனைவி எதைச் செய்தாலும் இரண்டு கண்களையும் இறுக மூடிக் கொள்ள வேண்டும்.

ஃ

பி. எஸ். சண்முகநாதன், முரசுமோட்டை.

கே: ஜெயந்தும் ரேகாரி, ஆங்கிலேய அழகி, ஜமாயா பௌவன சுந்தரி இத்தனை பேருக்கும் சுமுக்தி திருமதி குயுக்தியாருக்கும் என்ன வித்தியாசம்?

ப: மேற் குறிப்பிட்ட மூவரும் மூன்று யாரில் கவுன் போட்டுக் கொள்

> **திருவாளர் குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்,
> த. பெ. இல. 1183.
> கொழும்பு-12.

வார்கள், நாலாம்பேர் வழி ஆறுயாரை அப்படியே சுற்றிக் கொள்வாள் இது தான் வித்தியாசம்.

ஃ

வெற்றி வேந்தன், நாராயன்பிட்டி

கே: சமுத்துக் காந்தி, இலங்கையின் பட்டேல், வச்சிர நெஞ்சன், சொல்லின் செல்வன், துடிக்கும் காளை, இந்த ஐந்து தமிழர்களும் யாவர்?

ப; தமிழரசுத் தந்தை, டாக்டர் நாகநாதன், சுதிரவேற்பிள்ளை, இராசதுரை, அமிர்தலிங்கம்.

கே: அழகைத் தருவது எது? அவமதிப்பைத் தருவது எது? புத்தியைத் தருவது எது? உண்மையைச் சொல்வது எது? உதைபடுவது எது?

அழகைத் தருவது அறிவு. அவமதிப்பைத் தருவது ஆணவம், புத்தியைத் தருவது தோல்வி, உண்மையைச் சொல்வது மனச்சாட்சி, உதை படுவது வாய்க்கொழுப்பு.

கே: கொழும்பு ஏழில் இல்லாததும் உள்ளதும் எது?

ப: நன்றி! கொழும்பு ஏழில் உள்ள மனைவிகளிடம் கணவன் பால் நன்றி உணர்ச்சி அறவேயில்லை. அங்குள்ள நாய்களிடம் ஏற ... பால் நன்றி உணர்ச்சி நிறையவுண்டு.

த. சிவநாதன், யாழ்ப்பாணம்.

கே: தமிழரசுக் கட்சியின் தலைவர் என. ஆர். இராஜவரோதயம் எனவும், எஸ். ஜே. வி. செல்வநாயகம் என்றும் மாறி மாறிப்பேசுகிறார்களே இதில் எது சரி?

ப: தமிழரசுக் கட்சியின் தலைவர் என்றால் அது திரு. இராஜவரோதயத்தையே குறிக்கும். தமிழரசுத் தலைவர் என்றால் அது செல்வநாயகத்தைக் குறிக்கும். காரணம் தமிழரசு இயக்கத்தின் ஆதிகாரணர் திரு. செல்வநாயகம் அல்லவா?

ஃ

ந. சுப்பிரமணியம், தியத்தலாவை.

கே: இதுவரை தாங்கள் யாரையாவது ஏமாற்றியதுண்டா?

ப: உண்டு, பாலப் பருவத்தில் பல தடவைகளில் தான் யமனை ஏமாற்றியிருக்கிறேன் என்று என் அன்னை சொல்லியிருக்கிறார்.

ஃ

மா. தொண்டமான், மாவிட்டபுரம்.

கே: ஒரு பெண்மீது காதல் வலை வீசுகிறேன். அவள் தப்பிவிடுகிறாளே.

ப: அகப்பட்டால் தான் அவள் பாடு இற்றை வரை ஊதலாகிவிடுமே.

ஃ

அன்புச்சிவம், மண்டூர்.

கே: காதலின் கடைசிப் புகலிடம் எது?

ப: கலியாண ரெஜிஸ்டாரின் காரியாலயம்.

ஃ

ராஜா ஆனந்தம், மண்டூர்

கே: ஞாபக சக்தி யாருக்கு அதிகம் வேண்டும்?

ப: கடன் வாங்கியவரை விடக் கடன் கொடுத்தவருக்குத்தான் ஞாபக சக்தி அதிகம் வேண்டும்.

# வட இலங்கை பாடசாலை அதிபர்கள்மீது புகார்

ஃ

## ஊழியர்களின் சம்பளத்தை நிர்ணயிக்க தொழில் கமிஷனர் நடவடிக்கை

வடக்கிலுள்ள உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் அதிபர்கள் தங்கள்பால் அனுபவமில்லாத முறையிலும் அக்கறையற்ற தன்மையிலும் வேண்டா வெறுப்பாகவும் நடந்து கொள்வதாக அங்குள்ள பாடசாலைகளில் கடமை பார்க்கும் ஊழியர்கள் சங்கம் புகார் கூறுகிறது.

வட இலங்கைப் பாடசாலை ஊழியர்கள் சங்கம் தொழில் கமிஷனருக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பினார்கள். தமக்கு சம்பள விகிதம் நிர்ணயிக்க வேண்டும் என்றும் குறைந்தபட்ச சம்பளம் எதுவென்று வரையறுத்து வைக்க வேண்டும் என்றும் அந்த விண்ணப்பத்தில் சங்கம் கேட்டுக் கொண்டது. தொழில் கமிஷனர் தன்னா வட இலங்கைப் பாடசாலைகளின் அதிபர்களுக்கும் இப்படியான விண்ணப்பம் அனுப்பியது சங்கம்.

தொழில் கமிஷனர் தனது சிபார்சுகளைச் செய்ததும் எல்லாம் பார்த்துக்கொள்ளலாம் என்று பாடசாலை அதிபர்கள் சொல்லிக் கொண்டு இருந்தார்கள்.

தொழில் கமிஷனர் யாழ்ப்பாணத்திலுள்ள பதில் கமிஷனருக்கு ஓர் உத்தரவு பிறப்பித்தார். அதாவது சங்கப் பிரதிநிதிகளையும் பாடசாலை அதிபர்களின் சங்கப் பிரதிநிதிகளையும் வரவழைத்துப் பேசி நிலைமையைத் தமக்கு அறிவிக்கும்படி அவர் பதில் கமிஷனரைப் பணித்திருந்தார் என்று தெரிகிறது.

குறித்த தினத்தில் பதில் கமிஷனரின் அழைப்பை ஏற்று பாடசாலை ஊழியர்கள் சங்கப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைகளுக்காகச் சென்றிருந்தார்கள் ஆனால் பாடசாலை அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகள் செல்லவில்லை.

இது விஷயம் கொழும்பிலுள்ள தொழில் கமிஷனருக்கு யாழ்-பதில் கமிஷனரால் தெரிவிக்கப்பட்டது. தொழில் கமிஷனர் பாடசாலை ஊழியர்களின் சம்பளத்தை நிர்ணயம் செய்வதற்கு ஒரு 'டிபியூனலை' நிய மிக்கப்போவதாக அறியப்படுகிறது.

வட இலங்கைப் பாடசாலை ஊழியர்கள் சங்கம் 1946-ல் ஸ்தாபிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# அமெரிக்காவின் புதுக் கொடி!

அமெரிக்க நாட்டுப்புதுக் கொடி அங்கு நடைபெற்ற சுதந்திர நாள் விழாவில் பறக்க விடப்பட்டது.

அமெரிக்க நாட்டுக் கொடியில் இதுவரை 49 விண்மீன் சின்னங்களே இருந்தன; ஆனால் இப்போது 50 விண்மீன் சின்னங்கள் இருக்கின்றன. ஆவாய்த்தீவு அண்மையில் அமெரிக்கக் குடியரசுடன் சேர்ந்ததை யொட்டி இந்த விண் மீன் சின்னம் சேர்க்கப்பட்டுள்ளது. அமெரிக்க நாட்டுக் கொடியில் பொறிக்கப்பட்டுள்ள விண்மீன்கள் அமெரிக்கக் கூட்டாட்சியிலுள்ள மாநிலங்களைக் குறிப்பவையாகும்.

பிரிட்டானியர்களின் குண்டு வீச்சுக்கிடையே 'போர்ட்மக் என்றி' என்னுமிடத்தில் அமெரிக்க நாட்டு மக்கள் தங்கள் நாட்டு வாழ்த்துப்பாடலை இயற்றியது சரித்திரம் அறிந்ததாகும்; இந்த இடத்தில் இப்புதுக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது. கொடியேற்றும் போது 50 குண்டுகள் வெடித்து மரியாதை செலுத்தப்பட்டது. இப்புதுக் கொடி பிறகு ஆவாய் விமானத்தின் மூலம் அனுப்பப்பட்டு அமெரிக்கக் குடியரசின் மேற்குப் பகுதியின் மாநிலத்திலும் ஏற்றுவிக்கப்பட்டது.

(ஜியெஸ்)

# 'ராக்கெட்'டில் பறந்த முயல்!

ஃ

## உயிருடன் திரும்பியது!!

'ராக்கெட்'டில் வைத்து வான் வெளிக்கு அனுப்பப்பட்ட முயல், ஒன்றும் நாய்கள் இரண்டும் மீண்டும் உயிரோடு பூமிக்குத் திரும்பின.

வான மண்டலத்தை யார் முதலில் அடைவது என்பது பற்றிய ஆராய்ச்சியில் அமெரிக்காவும் ருஷியாவும் போட்டி போட்டுக்கொண்டு வேலை செய்து வருவது தெரிந்ததே.

சென்ற மாதம் ருஷ்யா, 'ராக்கெட்' ஒன்றைத் தயாரித்து அதில் இரண்டு நாய்கள் ஒரு முயல் ஆகியவற்றை வைத்து வான வெளிக்கு அனுப்பின; 'ராக்கெட் பூமியை விட்டு 130 மைல் தூரம் சென்றவுடன் முயலும் நாய்களும் வைக்கப்பட்டிருந்த பெட்டி மட்டும் பூமிக்குக் கொண்டு வரப்பட்டன; பெட்டியில் இருந்த நாய்களும், முயலும் உயிரோடு எவ்வித மாற்றமுமின்றி இருந்தனவாம்; இச்செய்தியை ருஷ்ய செய்தி நிறுவனம் (டாஸ்) அறிவித்தது.

வானமண்டலத்தின் மேல் படிவம், காஸ்மிக் வெளியின் மேல் படிவம் ஆகியவை பற்றி ஆராய்வதற்காகவே இச் சோதனை மேற் கொள்ளப்பட்டது; இச் சோதனையின் வெற்றி மனிதன் வான் வெளிக்குச் செல்லும் பயணத்தின் முதற்படி என்று அறிவியலார் கருதுகின்றனர்.

(ஜியெஸ்)

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
அங்கத்தவர்களுக்கு பூர்வாங்க அறிவித்தல்.
ஆண்டுப் பொதுக் கூட்டம்
20 ஆகஸ்டு 1960
5-30 மணிக்கு நடைபெறும்.
க. வயிரமுத்து,
பொதுச் செயலாளர்.

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே




ஃ ஃ ஃ

- ஒருவரின் ஆயுள் காலமுழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி.
- மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
- இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
- உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைச் சேருங்கள்.

ஃ ஃ ஃ

... ஏஜண்டுகள்:
ரெய்சு சர்ஸ் லிமிட்டெட்,
88 A, ... வீதி, கொழும்பு-11.
போன் : 4243, ...
கல்கத்தாவிலுள்ள இந்தியா எஞ்சினியரிங் கம்பெனியார் புதிருமோஹன் கவுன்சிலால் நடாத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாடு குமுறுகிறது- தாய் மொழி காக்க தமிழர்கள் திரள்கிறார்கள்

# இந்தியை எதிர்க்க அறப் போர் ஆகஸ்ட் 31-ல் துவங்குகிறது

## தி. மு. கழகம் முன்னின்று நடத்தும்

### பத்திரிகைகளும் கட்சிகளும் பிரமுகர்களும் ஆதரவு

தமிழ் நாடு குமுறுகிறது. அங்கு இந்தி புகுத்தப்படுவதை எதிர்த்து தி. மு. கழகம் அறப்போராட்டம் நடத்தத் தேதி குறித்துவிட்டது. அதாவது ஆகஸ்ட் 31-ல் இந்தி எதிர்ப்பு அறப்போர் என்று அறிவித்து விட்டது.

தி. மு. க. தொடக்கி நடத்த விருக்கும் மொழிப் போரில் இலட்சோப லட்சம் மக்கள் பங்கு பற்றச் சித்தங்கொண்டுவிட்டார்கள். அணியில் சேர விரைகிறார்கள். தி. மு. க. போராட்டம் நடத்துவதானால் இரண்டில் ஒன்று நிச்சயம் நடக்கும் என்பது தெரிந்த பொது மக்கள் தியாக உணர்வோடு திடமான நம்பிக்கையோடு, தெளிவான சிந்தனையோடு கழகத் தலைவர்களின் அறைகூவலுக்கு செவி கொடுக்கிறார்கள்.

தமிழ் நாட்டுப் பிரபல பத்திரிகைகள் தி. மு. கழகத்தின் உத்தேச இந்தி எதிர்ப்புப் போராட்டம் நியாயமானதுதான்; நடக்க வேண்டியதுதான் என்று வற்புறுத்தித் தலையங்கங்கள் தீட்டிப் பொதுமக்களைத் தயார் செய்து வருகின்றன. குறிப்பாக "கல்கி" வார இதழைக் குறிப்பிடலாம்.

இந்திய நாட்டின் பெருந் தலைவர்களில் ஒருவரும் தமிழ் நாட்டின் முது பெரும் அரசியல் பிரமுகருமான ராஜாஜியும் தி. மு. கழகத்தின் உத்தேச இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு அளிக்கிறார்.

அறப் போர் பற்றி அதன் தலைவர் ஈ. வெ. கி. சம்பத் எம். பியும், தி. மு. கழகத் தலைவர் அண்ணாத்துரையும், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியனும் மற்றும் கழக வீரர்களும் தரும் கருத்துரைகள் இங்கே பிரசுரிக்கப்படுகின்றன.

### அண்ணாத்துரை பேச்சு

நடக்கப் போகின்ற போராட்டத்தில் இரண்டு கைகளோடு போகக் கூடியவர்கள் ஒரு கையோடு திரும்பலாம். இரண்டு காலோடு களத்துக்குச் சென்றவர்கள் ஒரு கால் முறிந்து திரும்பலாம்



அறிஞர் அண்ணா

இரண்டு கண்களோடு சென்றவர்கள் காங்கிரசு ஆட்சியாளர்களால் ஒரு கண் அவிக்கப்பட்டு திரும்பலாம். இவைகளை எல்லாம் தாங்கக் கூடியவர்கள் கல் எறிகிறார்கள் என்று சொல்வது சரியல்ல. கட்டாய இந்தியை எதிர்ப்பேன் எதையும் தாங்கும் இதயம் எனக்கு உண்டு என்ற பட்டியலே நீண்டதாக்குங்கள்.

#### காலம் மாறிவிட்டது

இந்தியை 1928-ல் ஆச்சாரியார் புகுத்தினர். காமராசரை விட அவர் அசகாய சூரர். இவருக்காவது வழிகின்ற இரத்தம் கண்ணுக்குத் தெரியும். அவர்கறுப்புக் கண்ணாடி போட்டிருந்தார் எதையும் பார்க்கக் கூடாதென்று. அவரை எதிர்த்து நான்போராடிய நேரத்தில் என் பின்னாலே இருந்தவர்கள்மூன்று காவி உடை தரித்த பெரியவர்கள். ஈழத்துச்சிவானந்தடிகள், அருகிரிநாதர், சண்முக அடிகள் என்ற மூவரும் மூதாட்டி தருமாம்பாளும்தான் என் பின்னாலே இருந்தவர்கள். 37-ல் என்பின்னாலே இருந்தவர்கள் மூன்று பேர்; 60-ல் என் பின்னால் இருப்பவர்கள் காக்கி உடை கொடுத்தால் திம்மையா ஆகக் கூடிய 3 கோடி மக்கள் என்பதை நீங்கள் மறந்து விடாதீர்கள்; 1937-ல் எனக்கு பாசபந்தம் இருந்த நேரம். ஆனால் 1960-ல் நான் முதலிலா என் மனைவி முதலிலா, என்று போட்டி எங்களுக்குள் ஏற்பட்டிருக்கிறது.

#### ஒருகை

இந்த நேரத்தில் உன்னை ஒரு கை பார்க்காமல் வேறு எப்போது பார்க்கப் போகிறேன். நெடுங்காலமாகநான் எதிர்பார்த்தேன், எப்போது தவறு செய்வீர்கள் என்று; அந்த தவறைச் செய்து விட்டீர்கள்; இனி நீங்கள் அதிலிருந்து தப்ப வேண்டுமானால் நாணயமாக உங்கள் தாக்கிதை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் கரம் வலுத்து விட்டது. இங்கே இருப்பவர்கள் வீர உணர்ச்சி பெற்று விட்டார்கள். நீங்கள் கத்தியைக் காட்டினால் இடது கரத்தாலே பிடுங்கி முறித்துப் போட்டு விட்டு வலது கரத்தைக் கத்தியாக்கிக் கொண்டு போராட்டத்தில் ஈடுபடுவார்கள். எனவே ஆகஸ்டு 30-க்குள் உங்கள் அறிக்கையை நாணயமாக திரும்ப பெற்றுக் கொள்ளுங்கள்.

இல்லையேல் நாம் 30-ம் தேதிக்குப் பிறகு போராட்டத்தில் நிச்சயமாக ஈடுபடத்தான் போகிறோம். 31-ம் தேதி வரை எங்களிலே எவரையும் கைது செய்ய மாட்டார்கள் என்று தான் கருதுகிறேன். 31-ம் தேதி கடற்கரையில் உங்களையும் எங்களையும் சந்திக்க விட்டு கூட்டத்திலே சட்டத்துக்குட்பட்டு அடிப்பது போலத் தடியைச் சுழற்றிப் பாவனை செய்து கூட்டத்தைக் கலைப்பார்கள்.

ஆத்திரத்திலே எழுச்சி பெறுகின்ற மக்களின் கொதிப்பை அடிப்படையாக வைத்துச் சுடுவார்கள். ஒரு பக்கம் கடல் தன்னுடைய



நாவலர் நெடுஞ்செழியன்

ஓயாத அலையினால் உங்களை வரவேற்கும். இன்னொரு பக்கம் ஆட்சியாளர்களின் துப்பாக்கிக் குண்டு உங்களைத் துளைக்கும். நீங்கள் கடுகின்ற அந்தக் காட்சியை பார்க்க இங்கே ஆட்கள் இல்லா விட்டாலும் பக்கத்திலே இருக்கும் நாடுகள் உங்களைப் பார்த்து, தாய் நாட்டைக் காக்க, தாய் மொழியைக் காக்க, புறப்பட்டவர்களைச் சுட்டார்கள் என்று கட்டாயம் பேசும். அப்போது தான் இந்த நாட்டுக்கு விடுதலை கிடைக்கும்.

#### நேரமில்லை

நான் இனி உங்களை அடிக்கடி சந்தித்துப் பேச நேரமில்லை. கொடுக்க வேண்டிய பயிற்சியை கொடுக்க வேண்டிய நேரத்தில் தர வேண்டிய முறைப்படி கொடுத்து வைத்திருக்கிறேன். அதன் பலனை நீங்கள் எனக்குத் திருப்பித்தர வேண்டிய இந்த நாட்டு விடுதலைக்கு உங்களை அர்ப்பணிக்க வேண்டும். ஆகவே நான் அடிக்கடி சொல்ல வேண்டும் என்று யாரும் எதிர்பார்க்காதீர்கள். ஆட்சியாளர் அடிக்கின்ற நேரத்தில் தடியடி தாங்காமல் நீங்கள் யாரும் ஓடக் கூடாது. தரையிலே படுத்துக் கொள்ளுங்கள். சவு இரக்கமில்லாத அரசாங்கம் எதை வேண்டுமானாலும் செய்யட்டும் அதற்கு அச்சாரமாக நான் நீ என்று போட்டி போட்டுக் கொண்டு நீங்கள் வர வேண்டும்.

[illegible] கூறினர்.

### ஈ. வெ. கி. சம்பத் பேச்சு

இந்தி எதிர்ப்புப் போராட்டம் இதுவரை இந்திய வரலாறு சந்தித்திராத அளவுக்கு இருக்கும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சர்க்கார் நம்மைப் பற்றித் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறது; காரணம், நாம் இது வரை எதிலும் அபிப்பிராயம் சொல்வதோடு மட்டுந்தான் இருந்து வந்தோம் என்பது தான். ஆனால், இன்று அந்த நிலை இல்லை; நாம் இரண்டு தலைமுறையாக இழந்து விட்ட தன்மானத்தைத் திரும்பப் பெறும் கட்டம் நெருங்கி வந்து விட்டது!

ஆகவே, நாம் அளித்திருக்கும் இந்தத் தவணைக்குள்— ஆகஸ்டு 30-ந் தேதிக்குள் இந்தி இந்த நாட்டை விட்டுப் போய் விட வேண்டும்; இல்லையேல் ஆகஸ்ட் 31-ம் தேதி யன்று வீதியிலே நம்முடைய போராட்டத்தைத் துவக்குவோம்; நீதி கிடைக்கும்வரை வீடு திரும்ப மாட்டோம் என்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

இப்போராட்டத்தில் ஈடுபட வீட்டுக்கு ஒருவர் தயாராக இருக்கிறார்கள். ஒரு குடும்பத்திலுள்ளவர்கள், வீட்டில் யார் போராட்டத்தில் ஈடுபவது என்று முடிவெடுத்து விட்டார்கள்! வீட்டுக்கு வீர தியாக வரலாற்றில் இடம் பிடிக்க முனைந்து விட்டது என்பதையும் நான் தெரிவித்து, நீங்களும் தயாராக இருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இராசகோபாலாச்சாரியார், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் ஆகியோர் மந்திரி சபையில் இருந்த நேரத்தில் 'இந்தியைக் கொண்டு வருவோம்' என்று சொல்லி விட்டுச் செய்தார்கள்; அப்பொழுதும் நாம், இந்தியை எதிர்த்துப் போராட்டம் நடத்தினோம்; அதில் இரண்டு தோழர்கள் இறந்தார்கள்; பலர் தடியடி பட்டார்கள்; இதன் விளைவாக



கவிஞர் கண்ணதாசன்

இந்தி இங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டது! அதே இந்தி தான் இன்றும் நம்மை நோக்கி வருகிறது! இந்தப் பிரச்னையில் நமது வீரத்தைக் காட்டவில்லையென்றால் நமது வரலாறு அழிந்து விடும்.

"நம்மைப் பற்றி வடக்கே இருப்பவர்கள் மிகமிக மட்டமாகக் கருதிக் கொண்டு இருக்கிறார்கள்; இதை இனி மறைத்துப் பயனில்லை! எந்த முறையில் எதிர்த்தால் 'தென்னாட்டில் எதிர்ப்பு உண்டாகிவிட்டது' என்பதை அவர்கள் உணர முடியுமோ அந்த முறையில் தான் நாம் நம்முடைய எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும்.

"ஜாலியாவை சிறு விரசமான தோர் நிகழ்ச்சியின் மூலம் தான் 'இந்தியில் பேசாதே' என்று சொல்லித் தந்தார்கள். பத்திரிகையில் இதைப் பார்த்த பிறகு வடநாட்டுப் பத்திரிகை ஒன்று, 'தென்னாட்டில் இந்திக்கு எதிர்ப்பு இருக்கிறது' என்று எழுதுகிறது.

"இதற்கு முன் நம்முடைய எதிர்ப்பை அவர்கள் அலட்சியம் செய்தார்கள். இப்பொழுது, 'எதிர்ப்பு இருக்கிறது' என்பதை உணருகிறார்கள்!

"இந்திப் பிரச்னையில் கட்சி வேறுபாடுகளுக்கு இடமில்லை இது ஒரு தேசியப் பிரச்னையாகும்.

"வங்காளத்தில் பல அகில இந்தியக் கட்சிகள் உண்டு; ஆனாலும், அத்தனைக் கட்சிகளும் ஒரு மனதாக, 'இந்தியாவில் இருக்கும் 14 மொழிகளில் ஒரு மொழி மட்டும் தேசிய மொழியாவதை நாங்கள் ஒத்துக் கொள்ள மாட்டோம்' என்று 1½ ஆண்டுக் காலத்திற்கு முன்னே தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள்! இன்று ஆச்சாரியாரும் 'கல்கி' பத்திரிகையில் இந்தியைக் கண்டித்து எழுதுகிறார்; 'இது ஒரு கட்சிப் பிரச்னையல்ல' என்கிறார்!

"அதனால் எல்லாக் கட்சித் தோழர்களும் இதில் கலந்து கொள்ள வேண்டுமென நான் அழைப்பு விடுகிறேன்.

இவ்வாறு ஈ. வெ. கி. சம்பத் எம். பி. கூறினர்.

### நெடுஞ்செழியன் பேச்சு

மொழி என்ற அளவில் அவரவர்க்குத் தாய் மொழி ஒன்று தான் யாருக்கும். இரண்டு தாய் இருக்க முடியாது. சிற்றன்னை பெரியன்னை இருக்கலாம். எனவே ஆட்சி மொழி பல இருக்கலாம் தேசிய மொழியாக இந்தி எப்படி இருக்க முடியும்? எங்கள் தாய் மொழி தமிழ். நீ இந்தியைத் தேசிய மொழி என்று சொல்லுவது பொருந்துமா? 1937-க்கு முன்னால் எவருக்கும் இங்கே தாய் மொழியைப் பற்றி தெரியாது. யாரும் கவலைப் பட்டதும் இல்லை. 1938-ல் ராஜாஜி இந்தியைப் புகுத்தினர். அதற்குப் பிறகுதான் இங்கே பெரியார் ராமசாமியும் அறிஞர் அண்ணா போன்ற இன்னும் பலரும் மொழி உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டினார்கள். அதன் விளைவாகத் தூங்கிய மக்கள் எல்லாம் விழிப்புப் பெற்றார்கள். ஈழத்து சிவானந்த அடிகள் நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்றவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். மொழி உணர்ச்சி நமக்கு ஏற்பட்ட பிறகு உங்களைப் போல எங்களுக்கும் இந்தி தேவையற்றது.

#### எதிர்ப்பு

எவ்வளவு எதிர்ப்பு இருந்தாலும் இந்த ஆட்சியின் ஆணவத் திமிர், சர்வாதிகாரம் இந்தியை இந்த நாட்டு மக்கள் மீது திணிக்கச் சொல்கிறது. உலக வரலாற்றை அவர்கள் மறந்து விட்டார்கள். காந்தியார் போராட்டத்தில் குதித்ததும் சுதந்திரம் பெறவில்லை. 1942-ல், 1944-ல், புரட்சியென்று தந்திக் கம்பிகளை அறுத்தார்கள். தண்டவாளங்களைப் பெயர்த்தார்கள். கடைசியில் 1945-46-ல் காங்கிரஸ் பெயரைச் சொல்ல ஆளில்லை. அதற்குப் பிறகு 1947-ல் சுதந்திரம் பெற்றார்கள். வெள்ளையனே வெளியேறு என்றதும் வெள்ளையன் போய் விடவில்லை.

#### பின்வருவன

நாங்கள் செய்கிற இந்தப் போராட்டத்தில் எங்களில் பலர் உயிரிழக்கலாம். கை இழக்கலாம். கண் இழக்க

(13-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல், த. பெட்டி: 649, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைப்ரஸ் சுதந்திரக் குடியரசு நாடாகிறது

## ஆகஸ்ட் பதினாறாந் தேதி

## மக்காரியஸ் பாதிரியார் நடத்திய விடுதலை இயக்கத்தின் மகத்தான வெற்றி

## சிறுபான்மை மக்களுக்கு சட்டப்படி அரசியல் அதிகாரமும் பாதுகாப்பும்

**இதுவரை பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்து வந்த சின்னஞ் சிறு சைப்பிரஸ் தீவு ஆகஸ்ட் 16-ல் விடுதலை பெற்றுச் சுதந்திரக் குடியரசு நாடாக மலர்கிறது. இதற்கான வெள்ளை அறிக்கை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது.**

**சைப்பிரஸ் குடியரசில் சிறுபான்மை மக்களான துருக்கியர்களுக்கு அரசியல் அதிகாரமும் பாதுகாப்பும் சட்டப்படி அளிக்கப்படுகின்றன. சுதந்திரம் பெறுவதோடு பாதுகாப்பும் பெறும் துருக்கியர்கள் உலகெங்குமுள்ள சிறுபான்மை மக்களுக்கு இத்துறையில் வழிகாட்டிகளாக விளங்குகிறார்கள்.**

மத்தியதரைக் கடலில் 3-572 சதுர மைல் பரப்புள்ள சின்னஞ் சிறு தீவு சைப்பிரஸ். இங்கு மூன்று லட்சத்து நாற்பத்தொன்பதாயிரம் மக்களே வாழ்கிறார்கள். இவர்களில் ஐந்தில் நான்கு பங்கினர் கிரேக்கர்கள். மீதியுள்ள ஐந்தில் ஒரு பகுதியினர் துருக்கியர்கள். அதாவது சிறுபான்மையினர்.

### சிறுபான்மையினர் அஞ்சினர்

தீவு பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்தது. சுதந்திரம் பெற வேண்டும் என்ற ஆவல் மக்கள் உள்ளத்தில் கிளர்ந்தது. ஆனால் அதில் ஒரு சிக்கல். பெரும்பான்மையினரான கிரேக்கர்கள் சைப்பிரஸ் விடுதலை பெற்றுக் கிரேக்கத்தோடு இணைந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினர். அப்படியாயின் சிறுபான்மையினரான தாம் இன்னும் ஒருபடி கூடிய அளவில் சிறுபான்மையினராகி அல்லற்பட நேரிடுமே என்று அஞ்சினர் துருக்கியர்.

இந்த நிலைமையைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சைப்பிரஸ் கிரேக்கர்களையும் துருக்கியர்களையும் ஒருவரோடு ஒருவர் சுரண்டிக்கொள்ள வைத்து வேடிக்கை பார்த்தது. இதனால் சுதந்திரக் கிளர்ச்சி குடைமல் இருந்தது. மாறாக இனக்குரோதமும் அபிப்பிராயபேதமுமே வளர்ந்தன.

### குடியரசு நாடாக்க சம்மதம்

இந்த நிலையில் மக்காரியஸ் பாதிரியார் குறுக்கிட்டார். சுதந்திர இயக்கத்

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

கோயாரெஸ்

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

துக்குத் தலைமை தாங்கினார். போராட்டங்கள் நடத்தன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மக்காரியஸ் பாதிரியாரை நாடுகடத்தியது. ஆயினும் சுதந்திர இயக்கம் ஓய்ந்துவிடவில்லை. மேலும் வலுப்பெற்றது அது. அதனால் ஏகாதிபத்தியம் பணிந்துபோக வேண்டியதாயிற்று. சைப்பிரஸுக்கு சுதந்திரம் வழங்கி அதைக் குடியரசு நாடாக்கப் பிரிட்டன் சம்மதித்தது.

இதன்பிரகாரம் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் இம்மாத முற்பகுதியில் சைப்பிரஸ் வெள்ளை அறிக்கையும் சுதந்திர மசோதாவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. இனி விவாதத்தின் பின்னர் அது சட்டமாக வேண்டியதுதான்.

### உரிமைகளுக்கு பாதுகாப்பு

சட்டமானதும் சைப்பிரஸின் மக்கள் சபைத் தேர்தல் ஜூலை 31-லும் கிரேக்க-துருக்கிய வகுப்புச் சபைகளின் தேர்தல் ஆகஸ்டிலும் நடைபெறும். நாடு சுதந்திரக் குடியரசு நாடாக ஆகஸ்ட் 16-ல் மலரும்.

பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட வெள்ளை அறிக்கை பெரிய தொரு தொகுப்பு. அதின் 6 பிரிவுகள் ஒரு பிரிவு பின்வருமாறு கூறுகிறது:-

"புதிய குடியரசின் சுதந்திரம், புராதினமும் பாதுகாப்பும், அரசியல் திட்டத்தில் திட்டப்படி பரிபாலனம், தீவைப் பிரியவிடாமலும் வேறு எந்த நாட்டோடும் சேராமலும் தடுத்தல் கொண்ட உத்தரவாத உடன்படிக்கை இதே கட்சிகளால் செய்யப்பட்டிருக்கிறது. இதில் பிரிட்டன், கிரீஸ், துருக்கி சேர்ந்தும் அவசரமாயின் தனித்தும் நடவடிக்கை எடுப்பதற்கு உரித்து அளிக்கப்படுகிறது.

### அரசியல் அதிகாரங்கள்

இன்னொரு பிரிவில் சிறுபான்மையினருக்கு அளிக்கப்பட்டிருக்கும் அரசியல் அதிகாரம்பற்றியும் பாதுகாப்பு பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது வருமாறு:-

குடி அரசுத் தலைமையுடைய ஆட்சி முறை எழுதிக் கொடுக்கப்படும், ஒரு சைபிரியரான கிரேக்கர் தலைவராகவும், ஒரு சைபிரியரான துருக்கியர் உபதலைவராகவும் இருப்பர். இவர்களில் ஒவ்வொருவருக்கும் தனியாக வெளிநாடுகள், பாதுகாப்பு ஆகிய விஷயங்களின் தீர்மானங்கள் சட்டம் இயற்றல்களில் தடுக்கும் உரிமையும் ஏனைய விஷயங்களில் நிறுத்தி வைக்கும் உரிமையும் இருக்கும்.

ஏழு சைபிரிய கிரேக்கரும் மூன்று சைபிரிய துருக்கியரும் கொண்ட ஒரு மந்திரி சபை இருக்கும். இவர்களை தலைவரும் உபதலைவரும் முறையே நியமனம் செய்வர். பொதுஜன வாக்கின் மூலம் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஓரே பிரதிநிதிகள் சபை நிறுவப்படும். "வகுப்புச் சபை"களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்ட விவகாரங்கள் தவிர்ந்த ஏனைய விஷயங்களைக் கவனிக்கும். வகுப்புச் சபைகள் மதம், கல்வி விளையாட்டுக்கள் முதலியவற்றைக் கவனிக்கும். சட்டம் உயர்நீதிமன்றம், மேல் நீதிமன்றம், கீழ் நீதிமன்றங்கள், 2000 ஆட்கள் அடங்கிய இராணுவம், 2000 ஆட்கள்கொண்ட பொலீஸ் வழி வகுத்திருக்கிறது.

இராணுவம் தவிர்ந்த ஏனைய கருமங்களில் கிரேக்

(12-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் குடியேற்றவாசிகளுக்கு பெரும் ஏமாற்றம்—அநீதி

### காணி காட்டிலாகாவுக்கு மாறியது

தம்பலகமம் புதுக்குடியிருப்பில் எல். டி. ஓ. குடியேற்றக் காணியில் வதியும் தமிழ் பேசும் குடியேற்றவாசிகள் தங்களுக்கு விவசாயம் செய்வதற்கு வழங்குவதாக அரசாங்கத்தினால் உறுதியளிக்கப்பட்டிருந்த நிலம் தற்போது காட்டிலாகாவுக்குத் தரப்பட்டிருத்தலைக் கண்டு பெரும் அதிர்ச்சியும் ஏமாற்றமும் அடைந்துள்ளனர் என்று அறியப்படுகின்றது.

தம்பலகமம் புதுக்குடியிருப்பு எல். டி. ஓ. குடியேற்றப் பகுதியில் சுமார் நூறு தமிழ் பேசும் குடும்பங்கள் குடியேறி எட்டு வருடகாலமாய் வாழ்ந்து வருகின்றனர் வரட்சிப்பிரதேசமான மேற்படி குடியேற்றத்தில் ஒவ்வொரு குடியேற்றக் குடும்பத்துக்கும் ஓர் ஏக்கர் குடியிருப்பு நிலம் மட்டுமே வழங்கப்பட்டிருக்கின்றது. இக் குடியேற்றவாசிகளுக்கு உள்ளதைப்போல் இவர்களுக்கு விவசாயச் செய்கைக்கு நிலமோ மற்றும் வசதிகளோ இன்றுவரை அளிக்கப்படவில்லை. எனவே பிரஸ்தாப குடியேற்றவாசிகள் தங்கள் அவல நிலையை இடையுறுது அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறி வந்ததின் பயனாக அணு முட்டியான் நீர்த்தேக்கத் திற்குக் கிழக்கில் பாலம் போட்டுத் தரிசு நிலங்களைச் சாகுபடி செய்ய மேற்படி குடியேற்றவாசிகளுக்குத் தர அரசாங்கம் சமீபத்தில் சம்மதித்ததாகத் தெரிகின்றது.

ஆனால் மேற்படி நிலம்தற்போது அரசாங்கத்தினால் காட்டிலாகாவுக்குக்கொடுக்கப்பட்டு அக்காணியில் வனபரிபாலன இலாகா உத்தியோகத்தர்கள் தேக்கம் சோலை உற்பத்தி செய்ய பெருமுயற்சி எடுத்து வருகிறார்கள், இதைக் கண்டதும் மேற்படி குடியேற்றவாசிகள் பெரிதும் கலக்கம் அடைந்துள்ளனர். இதையிட்டுக் குடியேற்றவாசிகள் சார்பில் புதுக்குடியிருப்பு கிராம முன்னேற்றச் சங்கம் தம்பலகாமம் காரியாதிகாரி, திருமலை அரசாங்க அதிபர் போன்றோர்களுக்கு அனுப்பிய மகஜர்களில் மேற்படி காணியைக் காட்டிலாகாவிடம் இருந்து பெற்று வாழ முடியாமல் திண்டாடும் மேற்படி குடியேற்றவாசிகளுக்கு வழங்கும்படி கோரியிருப்பதாகத் தெரிகின்றது.


# கல்யாணப் பரிசாகவோ, பிறந்த நாள் பரிசாகவோ, என்றும் உங்கள் அன்பின் சின்னமாய் அளிக்க மிகச் சிறந்த பரிசு இதோ! புத்தம் புதிய

# எலைட் பெற்றலின்.

★ ★

## எலைட் பெற்றலின்

பொலியெஸ்ரர் நாரினால் திறம்படத் தயாரிக்கப்பட்டது. என்றும் கசங்காதது, சுருங்காதது, பாரம் குறைந்தது மங்காத கண்கவர் நிறங்களில் மிளிர்வது.

நீங்கள் நொடிப் பொழுதில் தோய்த்து உடன் அணியக்கூடியது. பெட்டி போடும் தொல்லை அற்றது.

எவ்வித கறைகளும் இளம் சுடுநீரில் கழுவ நீங்கிவிடும்.



★ ★

## எலைட் சுப்பர்லோன்

விற்கும் வியாபாரிகள் எல்லோர் இடமும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:-

# குண்டன்மால்ஸ்

## லிமிட்டெட்,

26, கெய்ஸர் வீதி, கொழும்பு.

—Mylads 406 60—


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறுமையிலும் புதுமை கண்ட, சிறுகதை மன்னன்

## ஓ. ஹென்றியின் வாழ்க்கைத் தத்துவம்

மேனாட்டு இலக்கிய வரலாற்றில் சிறுகதைத் துறையில் மாப்பஸான், எட்கார் ஆலன், போ பிரட் ஹார்ட்டி, ரடியார்ட் கிப்ளிங் ஆகியோர் வழி காட்டிகளாக விளங்கியுள்ளனர். ஓ. ஹென்றியையும அவர்களைச் சேர்ந்த ஒருவராகக் கருதலாம். ஓ. ஹென்றி கதை சொல்வதில் சிறந்தவர். நம் அன்றாட வாழ்க்கையின் அடிப்படையில் உள்ள துன்பம், உணர்ச்சி, இரக்கம் முதலியவற்றை வெளிப்படுத்தும் கலைஞர் அவர்.

### பிறப்பு

1862 செப்டம்பர் 11-ம் தேதி அமெரிக்காவிலுள்ள வட கரோலினு மாநிலத்தில் அவர் பிறந்தார். வில்லியம் சுட்னி போர்ட்டர் என்பது அவரது பெயர். அவரது புனை பெயரே ஓ. ஹென்றி என்பது. ஆஸ்டவில் ஒரு பாங்கியில் பணத்தை கையாடியதாக அவர் குற்றஞ் சாட்டப்பட்டு மூன்று ஆண்டு சிறைவாசம் செய்ய நேர்ந்தது. அவர் அந்நிகழ்ச்சியை மறக்கக் கருதினர்; மக்களும் அதை மறக்கச் செய்ய வேண்டுமென்று அவர் எண்ணினர். ஆதலால் அவர் ஓ. ஹென்றி என்னும் புனைப் பெயர் வைத்துக் கொண்டார். ஆனல் அவர் புகழ் பெற்றதற்குக் காரணம் சிறையில் இருந்த போது அவர் எழுதிய கதைகளே.

### சிறையில்

சிறைக் கூடத்தில் இருந்த காலத்தில் அவர் தம்முடைய மகள் மார்காட்டுக்குத் தாம் பிரயாணம் செய்து கொண்டிருப்பதாகப் பாவனை செய்து பல கடிதங்கள் எழுதினர். அவரது சிறைவாசம் பற்றிய இழிவான பேச்சுக்களுக்கு ஒரு மாற்ருகவே அவர் அவ்வாறு எழுதினர். ஜூரிகள் தமக்கு விரோதமாகத் தீர்ப்பளித்தார்களெனினும், தாம் அந்த பாங்கி விவகாரத்தில் குற்றவாளி அல்ல என்று பல ஆண்டுகளுக்குப் பின் அவர் எழுதியுள்ளார்.

1902-ல் ஓ. ஹென்றி நியூயார்க்குக்குப் போனர். அங்கு ஒருவரும் இன்னர் என்று அறிந்து கொள்ள மாட்டார்கள் என்று அவர் நினைத்தார். அங்கு அவர் ஒரு எழுத்தாளராக வாழ்க்கை நடத்தத் தொடங்கினர். அது பெரிய நகரமாதலால், வாழ்க்கையில் பலவகைப் பட்ட தன்மையை அங்கு அவர் கண்டார். தெருக்களில் அவர் அலைந்து திரிந்தார். பூங்காக்களுக்கும் உண்டிச் சாலைகளுக்கும் அவர் சென்ருர்; பெண்களையும், ஆண்களையும் அவர் கருத்தூன்றிக் கவனித்தார். பேச்சில் கண்ட மனங் கவரும் நுணுக்கங்களையும், மக்களது அனுபவத்தின் நிலையையும் அவர் நன்கு அறிந்தார். சிறிது காலத்தில் பல சஞ்சிகைகள் அவர் எழுதிய கதைகளை வெளியிடலாயின. அவரது புகழ் விரைவில் பரவியது. கதை வேண்டுமென்று கேட்ட சஞ்சிகைகளுக் கெல்லாம் அவரால் எழுத முடியவில்லை.

1904-ல் அவர் சிறு கதைகள் எழுதினர்; 1905-ல் 50 கதைகள் புனைந்தார்; அவரது கதைத் தொகுப்பு விரைவில் நூல் வடிவில் வெளியாயிற்று. அவருடைய கதைகள் நகைச்சுவை உள்ளன. உணர்ச்சி ஊட்டுவன. 1906 முதல் 1910 வரை அவர் ஒன்பது புத்தகங்கள் வெளியிட்டார். அவற்றுள் பெரும்பாலானவை நியூயார்க் வாழ்க்கையைப் பற்றியனவை. மத்திய அமெரிக்காவிலும் டெக்சாஸிலும உள்ள மக்களையும், அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் பற்றிய கதைகளும் உள்ளன.

மூன்று ஆண்டுகள் அவர் சிறைவாசம் செய்தாராயினும், அவருடைய கதைகளில் கசப்பைக் காண முடியாது. வெறுக்கை [illegible] அவை, அவரது நகைச்சுவை சிரிப்பும் இன்பமும் ஊட்டும். எனினும் அவற்றோடு கண்ணீர் மல்கவும் செய்யவும் என்று அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் ஒருவர் கூறுகிருர். அக்காலத்திய அமெரிக்கப் புதுமைக் கதைக்குரிய இயல்புகளெல்லாம் அவரது கதைகளில் இருந்தன. புரட்சியான வாழ்க்கை நெறியைப் போற்றும் போக்கு அவரிடம் காணப்பட்டது; தாழ்ந்த நிலைமையிலுள்ளவர்களிடம் பரிவு காட்டும் பான்மையும் அவற்றில் உள்ளது.

அவரது சிறந்த கதைகள் நியூயார்க் மக்களைப் பற்றியவை. அலுவலகங்களில் டைப் அடிப்பவர்களையும், கடைகளில் பணி செய்யும் பெண்களையும் மாணவர்களையும் பற்றி அவர் எழுதியுள்ளார். அவருடைய கதைகளைப் படித்துக் கொண்டே போனல் இனி என்ன நேரும் என்பதை அறிய வேண்டும் என்னும் அவா உண்டாகும்; வியப்பூட்டும் முறையில் கதைகள் முற்றுப் பெறும், கதையைப் படித்து முடிக்க வேண்டும் என்னும் ஆர்வம் படிப்பவர்களுக்கு உண்டாகும்.

### வெறுமையிலும் புதுமை

புதுமை காண முடியாத சாதாரண உணவு இல்லங்களிலும் மக்கள் சிறிதும் நினையாத நியூயார்க் தெருக்களிலும் அவரது கதைகள் காட்டும் புதுமைகள் மக்களை கவர்கின்றன. தாழ்வுற்ற மக்களிடம் பரிவு கொள்ளுமாறு அவர் செய்கிருர். வியப்பூட்டும் இன்ப முடிவுகள் மகிழ்ச்சி யூட்டுகின்றன.

மக்களுக்கு இன்பம் விளைப்பவை எவை, துன்பம் ஊட்டுபவை எவை என்பதை அறிந்தவர் அவர். 'இணையற்ற நகைச் சுவை அவருக்கு இயல்பாய் அமைந்

(7-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருக முன்னணி விழா

மாஸ்டர் சிவலிங்கம்

விசேஷமாகப் பத்திரிகை நிருபர்களுக்கென்று தயாரிக்கப்பட்ட அழைப்பிதழை மிருக முன்னணித் தலைவர் எனக்கு அனுப்பியிருந்தார். மிருக முன்னணியாரின் பிரமாண்டமான ஒரு விழா நடைபெற இருப்பதாக அறிந்ததும், புத்தம் புதிதான எனது 'கமரா'வைத் தோளில் போட்டுக் கொண்டு 'விர்' என்று விழா மண்டபத்துள் நுழைந்தேன். "மண் போட்டால் நிலத்தில் விழாது" என்பார்களே அப்படிப்பட்ட கூட்டம்! விழாப் பந்தலில் நிறைந்திருந்தவர்களின் பரபரப்பிற்கு இடையே பொலிஸாரின் ஜீப் வண்டியிலிருந்து குதித்திறங்கி கம்பீரமாக நடந்து வந்து மேடையில் ஏறினார் விழாத் தலைவர் 'சார்ஜன்ட்' மிஸ்டர் அல்சேஷன் அவர்கள். அவருடைய கழுத்திலிருந்த கவர்ச்சிகரமான அந்தத் தோல்பட்டி அவருடைய கம்பீரத்தைச் சற்று மிகைப்படுத்திக் கொண்டிருந்தது.

### அல்சேஷனின் தலைமையுரை

சங்கீத பூஷணம் ஒநாய் அவர்களின் இசையை அடுத்து, தலைமை உரை என்ற நிகழ்ச்சி வந்தது. மிஸ்டர் அல்சேஷன் அவர்கள் ஒலி பெருக்கியின் முன் வந்து மயிரைச் சிலிப்பிக் கொண்டு தமது தலைமை உரையைத் தொடங்கினார். "மிருக முன்னணி விழா ஒரு பெருமைக்குரிய விழா. நமது வம்சத்தின் வரலாற்றுச் சிறப்பைக் கூறும் புகழ் விழா—புதுமை விழா. நமது முன்னணி, தேர்தல் காலத்தில் மனிதர்கள் ஏற்படுத்தும் திடீர் முன்னணிகள் போன்றதல்ல. நிலையான முன்னணி—நிரந்தரமான முன்னணி. மனிதர்களின் சில கட்சிகள், முன்னணிகள், சங்கங்கள் போன்றவைகளிலுள்ளது போன்ற பதவிப் பித்தோ, போட்டி பூசலோ நமது முன்னணியில்லை என்பதைப் பெருமையுடன் கூறவிரும்புகிறேன்." (கரகோஷம்)

### குதிரையின் உரை

தலைமை உரை முடிந்ததுதான் தாமதம், முக்கிய பேச்சாளர் வரிசையில் பிரபலத்துவம் வாய்ந்தவரும், ராணுவவீரருமான 'லெப்டினன்ட்' குதிரை அவர்கள் மேடையில் தோன்றினார். 'ராணுவ இலாகாவில் மிருகவர்க்கம், இன்றல்ல; சரித்திரம் தொடங்கிய நாளிலிருந்து தனியிட மொன்றைப் பிடித்து வைத்திருக்கிறது. பழைய காலத்துப் போர்க்களங்களில் மன்னராட்சியின் கீழ் கடமை ஆற்றினோம். இன்று மந்திரிகள் ஆட்சியின் கீழ் கடமை ஆற்றுகின்றோம். இது தான் வித்தியாசம். மந்திரிகளின் ஆட்சியின் கீழ் நாங்கள் கடமை பார்த்தாலும் எந்த மந்திரியும் எங்கள் மீது குதிரைவிட முடியாது. காரணம் உலகில் ராணுவத்தினருக்கு மந்திரிகளே பயப்பட்டுக் கொண்டிருக்கும் காலம் இது' என்று முடித்தார் குதிரை.

### நாயின் இரண்டாவது உரை

அடுத்து இரண்டாவது முறையாகத் தலைவர் எழுந்து பொலிஸ் இலாகா சார்பில் பேசினார். "மனித வர்க்கத்தால் செய்ய முடியாத பல சாதனைகளை நாங்கள் நிலைநாட்டி வருகின்றோம். ஸி. ஐ. டி. இலாகாப் பிரமுகர்கள் கூடச் சுழியோடியும் கண்டுபிடிக்க முடியாத துப்புக்களை நாங்கள் கண்டுபிடித்துக் கொடுக்கின்றோம். களவெடுத்தவன் முதல் கழுத்தறுத்தவன் வரை நாங்கள் காட்டிக் கொடுக்கின்றோம். வீட்டைக் காப்பது மட்டுமல்ல எங்கள் தொழில், நாசகாரர்களிடமிருந்து நாட்டைக் காப்பதும் நாங்கள் தான். ஆகவே 'நாட்டைக் காக்க எங்களால்தான் முடியும்' என்று குரல் எழுப்பும் போலி அரசியல்வாதிகளை 'நாய்களென்று' திட்டி மனிதர்கள் எங்களோடு ஒப்பிடுவது கண்டிக்கத்தக்கதாகும். இப்படி நான் பேசுகின்ற பொழுது 'மலையைப்பார்த்து நாய் குலைத்தென்ன?' என்று மனித வர்க்கம் கூறினாலும் நாங்கள் அதைப் பொருட்படுத்தப் போவதில்லை"

### நடிகவேள் ஜிப்பி பேச்சு

விழாத் தலைவர் உட்கார்ந்தாரோ இல்லையோ, திடீரென்று விழா மண்டபம் கலகலப்படைந்தது. 'நடிகவேள்' ஜிப்பி அவர்கள் தமக்குச் சூட்டப்பட்ட மாலைகளிலுள்ள மலர்களை ஒவ்வொன்றாகப் பிய்த்துக்கொண்டு (இது குரங்கின் குணந்தானே!) தமது பேச்சை ஆரம்பித்தார். "கலையுலகில் மிருக வர்க்கத்தின் பணி மிகமிகப் பெரியது. எனது நண்பர்களான யானையர்களும், குதிரைகளும், புலியர்களும் மற்றும் 'எக்ஸ்ட்ராக்'களான மானர், முயலர், கரடியா போன்றவர்களும் சினிமா உலகிலும் [illegible] உலகிலும் செய்[illegible] தொண்டு சிறியதல்ல. என்னைப் பொறுத்த வரையில் நடிப்பு எனக்குப் புதிதல்ல. துள்ளிப் பாய்வதும், முகத்தைக் கோணிக் கொள்வதும் பல்லை இளிப்பதும் ஆகிய இவைதான் ஹாஸ்யம் என்று கருதும் சில மனித நடிகர்களைவிட நான் நன்றாகத்தான் நடிக்கிறேன் என்பதை யாரும் மறுக்க முடியாது. (கரகோஷம்) 'அரிது, அரிது மானிடராய்ப் பிறப்பது' என்று பெருமைப்படும் மனித வர்க்கம்,......"குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்" என்று கூறுவதன் மூலம் அவர்களை விட நாம் உயர்ந்தவர்கள் என்பதை ஒப்புக்கொள்கிறார்கள்" என்று பலத்த கரகோஷத்திடையே பேச்சை முடித்தார் நடிகவேள் ஜிப்பி.

### கழுதையின் முழக்கம்

கரகோஷம் மங்கி மறையுமுன் மேடைக்கு வந்தவர் வேறுயாருமல்ல, ஆயிரம் ஆயிரம் கூட்டங்களில் பேசிப் பேசித் தொண்டை கட்டிப்போன தோழர் கழுதை அவர்களேயாவர்.

"தொழிலாளர்கள் மனித வர்க்கத்தில் மட்டுந்தான் இருக்கிறார்கள் என்று கருதி 'மனிதவர்க்கம், மனிதவர்க்கம்' என்று குரலெழுப்புவர்கள் நமது கண்டனத்திற்கு உரியவர்கள். 'உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்' என்று பாடிய பாரதியார் மட்டுந்தான் நமது சக்தியை நன்றாகப் புரிந்திருக்கிறார். மிருக வர்க்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் படும் கஷ்டத்தை எந்த மனிதத் தொழிலாளியாவது அனுபவிக்கிறானா? வயலை மிதித்து உழுவது நமது தோழர்களான மாடர்கள். ஆனால் விளையும் பயிரை அரிவாள் கொண்டு அறுப்பவர்கள் மனிதர்கள். உழைப்பவன் ஒருவன், ஊதியம் பெறுபவன் இன்னொருவன். அடுக்குமா இந்த அநீதி? எனக்குத் தெரியும் மூட்டை தூக்கிய வருத்தம். மனிதர்களின் பாஷை பேசத் தெரியாத ஒரு குறைக்காக நான் மிக வருந்துகிறேன். அது மட்டும் தெரிந்திருந்தால்...... மனித வர்க்கத்தின் காதுகள் வெடிக்குமாறு அடித்துக் கூறியிருப்பேன்"

இந்த இடத்தில் எமது காது வெடிப்பது போன்று இருந்தது. ஆக்ரோஷத்தோடு நின்ற கழுதை அவர்களைப் படம் பிடிப்பது போன்று பாசாங்கு செய்து மெதுவாக விழா மண்டபத்தை விட்டு வெளியேறினேன். விழாவின் முடிவுரையாகத் தலைவர் அல்சேஷன் பேசிக்கொண்டிருந்தவார்த்தைகளை மனிதவர்க்கத்தின் மூகம் சிவக்குமாறு ஒலி பெருக்கி வெளியே கக்கிக் கொண்டிருந்தது.

### இனப் பெருமை

"அன்புசால் மிருகப் பெருமக்களே! மிருகங்களான நாம் மனிதர்களைவிட எவ்வளவோ முன்னேறி விட்டோம். மனிதர்களில் பலருக்கு உண்ண உணவில்லை; எங்களுக்கு இறைச்சியும் 'பிஸ்கட்டும்' தவறாது கிடைக்கின்றன. மனித வர்க்கத்திலே பலருக்கு வசிக்க இடமில்லை. நமது மிருக வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அழகான சர்க்கஸ் கூடாரங்களிலும், ராணுவக் கொட்டகைகளிலும் சொகுசாகச் சீவிக்கிறோம். மனிதர்களிலே பலர் இ. போ. ச பஸ்களில் செல்லக்கூட வசதியற்று இருக்கிறார்கள். ஆனால் நாங்கள் ஜீப்களிலும், சொகுசானகார்களிலும் உல்லாசமாகப் பயணம் செய்கின்றோம். மனிதர்களிலே பலருக்கு வேலையில்லை. ஆனால் நமது தொழிலாள

(13-ம் பக்கம் பார்க்க)

## வெறுமையிலும்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது. தாம் இன்ப ஒளி வீசுபவர் என்பதை அவரும் உணர்ந்திருந்தார்.


அவர் நியூயார்க்குக்கு வந்த பின் எட்டு ஆண்டுகளே வாழ்ந்தார். அவர் இறந்த பின் அவரது புகழ் மிகவும் விரைவில் பரவியது. வெளியிடப்படாதிருந்த அவரது நான்கு புத்தகங்கள் அவர் காலமான பின் பதிப்பிக்கப்பட்டன. 1916-ல் நிறுவப் பெற்ற கலை விஞ்ஞானக் கழகம் ஒவ்வொரு ஆண்டும் வெளியாகும் சிறந்த சிறு கதைக்கு ஓ. ஹென்றி நினைவாக ஒரு பரிசு வழங்குகிறது. 'இங்கிலாந்துக்கு டிக்கன்ஸ் உண்டு; பிரான்சுக்கு விக்டர் ஹியூகோ உண்டு; அமெரிக்காவுக்கு ஓ. ஹென்றி உண்டு' என்று ஒருவர் எழுதியுள்ளார். பல மொழிகளில் அவருடைய கதைகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

ஓ. ஹென்றி 252 சிறு கதைகள் எழுதியிருக்கிறார். அவற்றுள் பல நெடுங்காலம் வாழும் சமூகத்துக்குப் பலவகைப்பட்ட உணர்வு ஊட்டும் முறையில் அவர் கதைகள் எழுதியிருக்கிறார். மக்களிடத்தில் பல்வகைக் குணங்கள் கலந்திருப்பினும் ஏதேனும் நல்ல குணம் இருக்கும் என்பது அவரது கருத்து.

### வாழ்க்கை

"வாழ்க்கை என்பது இன்பம் அன்று; துன்பமும் அன்று; அது இரண்டும் கலந்தது. நமது சிரிப்பை அழுகையாகவும், நமது பெருந் துயரத்தை மகிழ்ச்சியாகவும் மாற்றும் நமக்கு அப்பாற் பட்ட எல்லாம் வல்ல ஆற்றல் ஒன்று உண்டு. நாம் கூத்தாடும் பாவைகள்; அழகின்ற பொம்மைகள். நம் விருப்பப்படி அவ்வாறு நாம் செல்வது அரிது. ஒளி வீசும் விளக்குகள் அலைகின்றன. ஒவ்வொரு மரப் பெட்டிகளில் நாம் வைக்கப்படுகின்றோம். நமது அற்ப வெற்றியை மறைக்கும் இருள் சூழ்ந்த இரவு வருகின்றது" என்று அவர் தாம் எழுதியுள்ள ஒரு கதையில் கூறியிருக்கிறார்.

(பிவிஜி)




இலங்கையில் எல்லோராலும்
விரும்பப்படும் அலங்காரம்
ஏனெனில் இது குறைந்த
செலவில் பாதுகாப்பு அளிக்கிறது

சுப்பர்

சினோசெம்

இதுவரை உற்பத்தி செய்யப்பட்டவற்றுள்
அதி விசேஷமான சிமேந்து பெயின்ட்



காங்கிரீட், செங்கல், கருங்கல், அஸ்பெஸ்டஸ் மற்றும் சிமேந்து கட்டுகளில் தண்ணீர் புகாதபடி சுப்பர் சினோசெம் கெட்டியாகப் பாதுகாக்கிறது. சாதாரணமாக குறிப்புகளின்படி பூசினால் கழுவப்பட்டுப் போகாது; வெடிக்காது; உரியாது; உராய்ந்து போகாது.

சுண்ணாம்பு பூசிய சுவர்களிலோ அல்லது காங்கிரீட் பூச்சுக் கொடுத்தவற்றிலோ அவற்றைக் கெட்டியாக்கி விட்டு சுப்பர் சினோசெம் பூசலாம்.

கலப்பது சுலபம். வாங்குவதிலும் பாவிப்பதிலும் சிக்கனம். 112 இருத்தல் சுப்பர் சினோசெம் சராசரி 3,200 சதுர அடிக்குப் பாவிக்கலாம்.

இருபத்தொரு நிறங்களில் கிடைக்கும் — 7 இருத்தல், 56 இருத்தல், 112 இருத்தல் தகரங்களில்.

சுப்பர் சினோசெம் நீர்ப் பாதுகாப்பளிக்கும் சிமேந்து பெயின்ட்.

கொழும்பு கொம்மேர்ஷல் கம்பனி லிமிட்டெட்,

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

[illegible] ரேட், கொழும்பு-2. போன்: 79351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1960 ஜூலை மாதம் 24-ந் தேதி

194 எ, பண்டாரநாயகக மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183.


## தேர்தல் முடிவு

இலங்கைத் தமிழரசுக் கட்சியினர், யு. என். பி. அரசாங்கத்தை "நச்சுப் பாண்டம்! நாட்டுக்கு உதவாதது!" என்று கடந்த ஏப்ரல் மாதத்தில் தீரத்துடனும், தீர்க்கதிருஷ்டியுடனும் கவிழ்த்துவிட்டார்கள்.

அதேபோல—தமிழரசுக் கட்சியின் செயலை முற்றும் ஆதரிப்பதேபோல—யு. என். பி. அரசாங்கம் மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது என்று சிங்களப் பொதுமக்களும் ஜூலை இருபதில் அதை அடியோடு சரித்து ஆழப் புதைத்து விட்டார்கள்.

வகுப்புத் துவேஷத்தினாலும், இனவெறியைத் தூண்டுவதனாலும், நாக்கில் நரம்பின்றிப் போக்கிரித்தனமான பொய்ப் பிரசாரங்களைச் செய்வதனாலும், சோதிடர்களுக்குப் பணம் கொடுத்து சோதிட சாத்திரத்தைத் திரிப்பதனாலும் தேர்தலில் வெற்றி பெற்றுவிடலாம் என்று திரு டட்லி சேனநாயகாவும், அவர்தம் வால்களும் ஏரிக்கரை, டைம்ஸ் ஸ்தாபனங்களின் ஆங்கில சிங்கள ஆபாசப் பத்திரிகைகளும் கண்ட கனவு, கக்கிய விஷம், போட்ட திட்டம், வரைந்த படம், செய்த இழிவான காரியங்கள் எல்லாம் தவிடுபொடியாக்கப்பட்டுவிட்டன. பொதுமக்களின் நிதானம், நெறி, நடுநிலை ஆகியன சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுவிட்டன.

இன்று ஏற்பட்டிருக்கும் வெற்றி சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும், நடுத்தர-ஏழைத்தர சிங்கள வகுப்பாருக்கும் மகத்தான வெற்றியாகும். இதை யாரும் மறுக்க முடியாது.

யு. என். பி.யைப் பொறுத்தவரையில் தோல்வி சாதாரண தோல்வியல்ல; மூக்கு காட்ட முடியாத அவமிந்த அவமானமான படுதோல்வியாகும்! கடந்த பொதுத் தேர்தலின் பின் தமிழ் பேசும் மக்களின் நல்வாழ்வை விசாரித்து, புறக்கணிப்பாக நடந்து கொண்ட திரு டட்லியின் அகம்பாவத்துக்கும், தலைக்கனத்துக்கும் இத்தோல்வி ஒரு தக்க மண்டையடியாகும். ரூபாய் நோட்டினால் ஏணி கட்டி யு. என். பி.யை ஆட்சிபீடத்துக்கு ஏற்றிவிடலாம் என்று நினைத்த பண முதலைகளுக்கு ஒரு படிப்பினையாகும்.

தமிழ் பேசும் மக்கள் இத்தேர்தல் முடிவுபற்றி கவலைப்படவும் இடமில்லை; களிப்புறவும் இடமில்லை. இனி என்ன நடைபெறப்போகிறது என்பதில்தான் இத்தேர்தலின் பெறுபேறுகளை அவர்கள் நிர்ணயிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள்; பொறுத்திருந்து தீர்ப்புக் கூற வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

தேர்தல் முடிவுகள் வேறு பல உண்மைகளையும் நிலை நாட்டுகின்றன. அவையாவன:

1. குறுகிய நோக்குடைய அரசியல்வாதிகள் இனபேத வகுப்பு வெறிகளைக் கிளப்பினாலும், சிங்களப் பொதுமக்கள் இன்னொரு வகுப்புக் கலவரத்துக்குத் தயாராயில்லை. கடந்த வகுப்புக் கலவரத்தின்போது கற்றுக்கொண்ட கசப்பான பாடங்களை அவர்கள் மறக்கவில்லை. எனவே, தமிழ் பேசும் மக்களுடனும், ஏனைய சிறுபான்மை மக்களுடனும் சமாதானமாக ஒத்துப்போகக்கூடிய ஒரு அரசாங்கத்தையே அவர்கள் பெரிதும் விரும்புகிறார்கள் என்பது ஒரு உண்மையாகும்.

2. தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளைப்பற்றிச் சிங்களப் பொதுமக்களிடம் யு. என். பி.யினர் பூச்சாண்டி காட்டியபோதிலும், அவற்றைக் கொடுத்தேனும் நாட்டில் சாந்தியையும், சமாதானத்தையும், சுபீட்சத்தையும் வளர்க்க வேண்டும் என்பதில் சிங்களப் பொதுமக்கள் சார்பான நாட்டம்கொண்டுவிட்டார்கள் என்பது இரண்டாவது உண்மையாகும்.

3. பண்டாரநாயகா—செல்வநாயகம் உடன்படிக்கையைச் சிங்களப் பொது மக்கள் விரும்பவில்லை, எதிர்க்கிறார்கள் என்று யு. என். பி. கயிறு திரிப்பது சுத்த ஏமாற்று. பண்டாரநாயகாவின் கொள்கையையே தாம் கடைப்பிடிக்கப் போவதாக திருமதி சிறீமாவோ பண்டாரநாயகா அழுத்தந்திருத்தமாகக் கூறியிருந்தும், அவருக்குச் சிங்களப் பொது மக்கள் இத்தேர்தலில் பரிபூரணப் பெரும்பான்மைப் பலம் கொடுத்திருப்பது பிரஸ்தாப உடன்படிக்கையை அமுல் நடத்தப் பரிபூரண அதிகாரம் வழங்கியது போலாகும் என்பது ஒரு உண்மை.

இத்தகைய ஆணித்தரமான உண்மைகளைப் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன நடந்தேறிய தேர்தல் முடிவுகள். இவற்றை யெல்லாம் மனதில் கொண்டு பொறுப்புணர்ச்சியுடனும் நடுவுநிலைமையுடனும் ஒரு ஆட்சியைச் செவ்வனே அமைத்துச் சீருற நடத்த வேண்டியது திருமதி சிறீமாவோ பண்டாரநாயகாவைத் தலைவராகக் கொண்ட சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் கடமையாகும்.

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரையில் அவர்தம் பிரதிநிதிகள் இப்போது தான் மிக்க விழிப்பாக இருக்க வேண்டும். தமிழ் பேசும் மக்களுடைய இழந்த உரிமைகள் மீளப் பெறும்வரை எந்த ஒரு தமிழ்ப் பிரதிநிதியும் அரசாங்கத்தில் பட்டம் பதவி பெறுமல் எட்டநின்று தமிழ் பேசும் மக்கள் இதுகாறும் ஸ்தாபித்து வந்த எதிர்ப்பு உணர்ச்சியை மேலும் பலம் பெறச் செய்ய வேண்டும். பழைய அரசாங்கங்கள் செய்த தவறுகளை உணர்ந்து புதிய அரசாங்கம் தாமாகவே, தமிழ் பேசும் மக்களின் தலவுரிமைகளை நல்லெண்ணத்தோடு பேணிக் காக்க முன்வரும் வரை எதிர்ப்பைத் தளர்த்தக் கூடாது. இது தமிழ் பேசும் மக்கள் மேற்கொள்ள வேண்டிய எச்சரிக்கை.

அதே போலச் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு இ கிடைத்து விட்ட அமோக வெற்றி ஆணவத்தையும் அகங்காரத்தையும் தருவதாய் அமைந்துவிடக் கூடாது. சிறுபான்மை மக்களைத் திருப்திப் படுத்தி அவர்களுடைய நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் பெறாத எந்த அரசாங்கமும் நாட்டில் அமைதியையும், ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் நிலை நாட்ட முடியாது என்ற உண்மையை ஆரம்பத்திலேயே உணர்ந்து செயலாற்றத் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா தவற மாட்டார் என்று நம்புகிறோம்.

# வடக்கிலும் கிழக்கிலும் தமிழரசார் வெற்றி விவரம்

### பருத்தித்துறை



திரு கே. துரைரத்தினம் (தமிழரசு) 8,226
திரு என். நடராஜா (தமிழ் காங்கிரஸ்) 3,968
அதிகப்படியானவை 4,258

### சாவகச்சேரி



திரு வி என். நவரத்தினம் (தமிழரசு) 14,799
திரு எஸ் கே. திரவியநாயகம் (தமிழ் காங்கிரஸ்) 2,410
அதிகப்படியானவை 12,389

### மூதூர்

(இரு அங்கத்தவர்)



திரு டி. ஏகாம்பரம் (தமிழரசு) 13,304
ஜனுப் ஏ. எல். ஏ. மஜீது (சுதந்திரக் கட்சி) 13,247
ஜனுப் எம். எச். முகமது அலி (யு. என். பி.) 11,417
திரு எச். டி. லீலாரத்ன (சுயேச்சை) 7,916
திரு பி. டி. ஈ. விக்டர் பெரேரா (எம். ஈ. பி.) 181
அதிகப்படியானவை 57

### கற்குடா



திரு பி. மாணிக்கவாசகர் (தமிழரசு) 7,605
திரு எஸ். வெஞானம் (சுயேச்சை) 5,295
அதிகப்படியானவை 2,810

### பட்டிருப்பு



திரு. எஸ். எம் இராசமாணிக்கம் (தமிழரசு) 10,948
திரு. எஸ். யு. எதிர்மன்னசிங்கம் (தமிழ் காங்கிரஸ்) 5,283
திரு. ஈ. பொன்னையா (சுயேச்சை) 247
அதிகப்படியானவை 5,665

### கோப்பாய்



திரு எம். பாலசுந்தரம் (தமிழரசு) 12,028
திரு டி. குணரத்தினம் (தமிழ் காங்கிரஸ்) 5,732
அதிகப்படியானவை 6,306

### மன்னார்



திரு வி. அழகக்கோன் (தமிழரசு) 7 307
ஜனுப எஸ். எச். மொகமட் (யு. என். பி) 5,790
அதிகப்படியானவை 1,517

### உடுவில்



திரு வி. தர்மலிங்கம் (தமிழரசு) 11,475
திரு பி. நாகலிங்கம் (சமசமாஜக் கட்சி) 6,702
அதிகப்படியானவை 4,773

### கிளிநொச்சி



திரு ஏ. சிவசுந்தரம் (தமிழரசு) 5,338
திரு வி ஆனந்தசங்கரி (சமசமாஜக் கட்சி) 2,011
அதிகப்படியானவை 3,327

## சுதந்திரன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுத்தவர் தொகுதியான கொழும்பு தெற்கில் ஜே. ஆர். ஜெயவர்த்தனு தெரிவு செய்யப்பட்டிருப்பதால் யு. என். பி. பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கை 30 ஆகிறது. அவ்வளவுதான்.

எந்தச் செய்தியையும் முந்தித் தரும் சுதந்திரனில் வெளியிடப்படும் கருத்துக்களும் எப்பொழுதும் தேர்ந்த கருத்துக்களாகவே இருக்கும் என்பதற்கும் சுதந்திரனில் முன் கூட்டிச் சொல்லப்படுபவை நடந்தேறும் என்பதற்கும் இது ஒரு சான்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பிரதேசத்தில் மூபெரும் வெற்றிகள்

தமிழ்ப் பிரதேசத்தில் போட்டியிட்ட அபேட்சகர்கள் பெற்ற வெற்றிகளில் மூன்று குறிப்பிடத்தக்கனவும் பாராட்டுக்கு உரியனவுமாகும். மூதூர், கல்முனை, யாழ்ப்பாணம் ஆகியவையே சம்பந்தப்பட்ட தொகுதிகளாகும்.

மூதூரில் தமிழரசு அபேட்சகர் திரு ஏ. ஏகாம்பரம் முதலாவது பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார். சென்ற தேர்தலில் 5 அதிகப்படி வாக்குகள் பெற்று முதலாவது பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்ட இவர் இம்முறை 57 வாக்குகள் மேலதிகமாகப் பெற்று வெற்றிவாகை சூடினர்.

### அலியின் கதி

மார்ச் தேர்தலில் இரண்டாவது பிரதிநிதியாக வந்த ஜனாப் எம். எச். முகம்மது அலியை இம்முறை இரண்டாவதாகவும் வர விடாமல் ஒதுக்கித் தள்ளித் தோற்கடித்து விட்டார்கள். கடைசி நேரத்தில் யு. என். பி. யோடு ஒட்டிக் கொண்ட அலிக்கு அருமையான பாடம் இது.

### காரியப்பர் குடை சாய்ந்தார்

கல்முனைத் தொகுதியில் ஜனாப் எம். எஸ். காரியப்பரை தமிழரசு அபேட்சகர் ஜனாப் எம். சி. அகமது தோற்கடித்தார். மார்ச் தேர்தலில் தமிழரசுக் கட்சி அபேட்சகர் ஜனாப் மசூர் மௌலானாவிடம் தப்பிப் பிழைத்த ஜனாப் காரியப்பரை இம்முறை ஜனாப் அகமது நொருக்கி பார்த்து விட்டார். முஸ்லிம் சமூகத்தின் இருந்த தர்க்கமும் தீர்க்கப்பட்டது என்றுதான் இது பொருள் படும்.

### பொட்டப்பர் போய்விட்டார

யாழ்ப்பாணத்தில் 'தனிப் பெருந் தலைவர்' அதாவது பொட்டப்பர் பாராளுமன்ற ஆசனத்தை எட்டிப் பார்க்கவும் முடியாதபடி செய்து விட்டார் சுயேச்சை அபேட்சகர் திரு ஏ. டி. துரையப்பா. திரு பொன்னம்பலத்தை மார்ச் தேர்தலிலும் திரு. துரையப்பா தோற்கடித்தார் இம்முறை அது நடக்க முடியுமா என்று பலரும் சந்தேகித்தார்கள். யாழ் மேயர் பதவியிலிருந்து கலைக்கும் தள்ளப்பட்டதோடு துரையப்பாவின் அரசியல் வாழ்வே முடிந்தது என்று எண்ணியவர்களையெல்லாம் தமது வெற்றியின் மூலம் திரு துரையப்பா திகைக்க வைத்து விட்டார். "என்ன இருந்தாலும் துரையப்பா ஆள் ஒரு வின்னன்தான்" என்று அவருடைய அரசியல் எதிரிகளும் தம்மைப் பாராட்டும்படி செய்து விட்டார்.

## தமிழ்ப் பிரதேசத்தில் தேர்தல் முடிவுகள்

### கல்முனை



ஜனாப் எம். சி. அகமது (தமிழரசு) 7,616

சோல் முதலியார் ஜனாப் எம். எஸ். காரியப்பர் (அ. இ. இ. முன்னணி) 5,651

அதிகப்படியானவை 1,965

### நிந்தவூர்



ஜனாப் எம். ஐ. எம். அப்துல் மஜீத் (த-அ- ஆதரவாளர்) 12,115

ஜனாப் எம். ஏ. எம். ஜலால்தீன் (சுயேச்சை) 4,339

அதிகப்படியானவை 7,776

### பொத்துவில்



ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீத் (த. அ. ஆதரவாளர்) 11,591

ஜனாப் எம். இஸட். கே. எம். காரியப்பர் (அ. இ. இ. முன்னணி) 837

அதிகப்படியானவை 10,754

## பத்திரிகைகளின் முகத்தில் கரி!

ஆங்கிலப் பத்திரிகைகளான டெய்லி நியூஸ், ஒப்சேவர், தினமின, சிலுமின, ஜனதா ஆகியவற்றின் முகத்தில் கரி!

டைம்ஸ், லங்காதீப ஆகிய பத்திரிகைகளும் இந்த வெகுமதிக்குத் தப்பவில்லை.

ஜூலை பொதுத் தேர்தலுக்கு நாள் குறிப்பிடப்பட்டதும் இந்த ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் எல்லாம் ஒரே அடியாக யு. என். பிக்கு வக்காலத்து வாங்கின. "தேசிய தினசரிகளாக இருந்து மக்களுக்கு கட்சிச் சார்பற்ற செய்திகள் கொடுக்கிறோம்" என்று தம்பட்டமடித்துக் கொண்டு அசல் யு. என். பி. பிரசாரமே இவை செய்து வந்தன.

இப்படிச் செய்தும் கண்ட பலன் என்ன? முகத்தில் கரி. யு. என். பிக்கு ஆக 30 ஸ்தானங்கள் 'தேசியப் பத்திரிகை'களுக்கு இந்த வெட்கக் கேடு போதாதா?

# டட்லி சுதந்திரனை பழிவாங்க எடுத்த முயற்சி படுதோல்வி

## சட்ட ஆலோசகர்கள் கையை விரித்துவிட்டார்களாம்

டட்லி சேனநாயகா தாம் பிரதமராயிருந்தபோது சுதந்திரனைப் பழிவாங்க எடுத்த முயற்சி படுதோல்வி அடைந்தது. தம்மை அவதூறு செய்யும் வகையில் சுதந்திரனில் எழுதிப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது என்ற எண்ணத்தில் சுதந்திரன்மீது சட்ட நடவடிக்கை எடுக்க ஆலோசனை கேட்டுச் சம்பந்தப்பட்ட சில சுதந்திரன் பிரதிகளைத் தமது சட்ட ஆலோசகர்களிடம் அவர் கொடுத்தபோது அவர்கள் ஒன்றும் செய்ய முடியாது என்று கையை விரித்துவிட்டார்களாம்.

5-6-60 சுதந்திரனில் "டட்லி இதுவரை கைது செய்யப்படாதது ஏன்?-அதிகாரம் அவர் கையில்; பொலீஸ் அவர் பின்னல் என்பதாலா?—சிங்களப் பாமர மக்களைத் தூண்டிவிட்டு வருகிறரே!—பதவி ஆசையால் பிரதமரே துரோகி ஆகிருர்" என்ற தலைப்பில் திரு சிங்கம் எழுதிய 'கட்டுரையை பிரசுரிக்கப்பட்டது.

பின்னர் 12-6-60 இதழில், "படைத் தலைவர்களை ஏவிவிட்டார் டட்லி, பொலீஸாரைக் கண்காணிக்க!" என்ற தலைப்பில் முதல் பக்கச் செய்தி ஒன்று வெளியிடப்பட்டது.

மற்ற எல்லாக் கட்டுரைகள், செய்திகளிலும் பார்க்க மேலே குறிப்பிட்ட கட்டுரையிலும், செய்தியிலும் தான் தாம் மிக மோசமாக அவதூறு செய்யப்பட்டிருப்பதாக கருதினர் டட்லி. ஆகவே குறித்த இரண்டு பிரதிகளையும் தமது சட்ட ஆலோசகர்களிடம் கொடுத்து சட்ட நடவடிக்கை எடுக்க ஆக வேண்டியதைக் கவனிக்கச் சொன்னர்.

சட்ட ஆலோசகர்கள் கட்டுரையையும் செய்தியையும் படித்துவிட்டு டட்லிக்காக இரங்கினர்களாம். ஏது எப்படி இருந்தபோதிலும் கட்டுரையிலும் செய்தியிலும் அவதூறுக்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இல்லை. அவ்வளவு நுட்பமாகவும் பாதுகாப்பாகவும் எழுதிப் பிரசுரித்திருக்கிறர்கள். பழிவாங்க வேண்டுமானல் வேறு வழியைத் தேட வேண்டியதுதான் என்று சொல்லி அவர்கள் கையை விரித்துவிட்டார்களாம்.

சுதந்திரன்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகப் பூச்சாண்டி காட்டியவர்கள் பலர் கடைசியில் வாலைச் சுருட்டிக் கொள்வது வழக்கம். டட்லி அப்படிப் பூச்சாண்டி எதுவும் காட்டவில்லை. சட்ட ஆலோசகர்களிடம் சென்று ஏமாற்றத்தோடு திரும்பினர்.


## சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவருமல் பெற்றுக் கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா 10-00

(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சர்குலேஷன் மனேஜர்
சுதந்திரன்.

தபால் பெட்டி 1183,
கொழும்பு.


# நடந்த பொதுத்தேர்தலில் குறிப்பிடத்தகக அம்சங்கள்

—————o—————

## சுதந்திரக் கட்சியின் வெற்றியும் யு. என். பி.யின் வீழ்க்காடும்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 75 தொகுதிகளில் வென்றது. யு. என். பி. 30 ஸ்தானங்களையே கைப்பற்றியது. யு. என். பி. முன்னர் இருந்ததில் 20 ஸ்தானங்களைப் பறிகொடுத்தது. சுதந்திரக் கட்சி முன்பு இருந்த 46 ஸ்தானங்களோடு இன்னும் 29 ஸ்தானங்களைக் கைப்பற்றியது. சமசமாஜக் கட்சி, கொம்யூனிஸ்டு கட்சி ஆகியவற்றோடு தேர்தல் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொண்டு தேர்தல் களத்தில் இறங்கினுலும் இப்போது தான் தனித்து அரசாங்கத்தை அமைக்கக் கூடிய பெரும்பான்மை ஸ்தானங்களோடு அது வந்திருக்கிறது.

கடந்த புதன்கிழமை நடந்த தேர்தல் முடிவுகளின்படி கட்சி நிலைமை வருமாறு!—

| | |
|---|---|
| சுதந்திரக் கட்சி | 75 |
| யு. என். பி. | 30 |
| தமிழரசுக் கட்சி | 16 |
| சமசமாஜக் கட்சி | 12 |
| கொம்யூனிஸ்டு | 4 |
| எம். ஈ. பி. | 3 |
| எல். பி. பி. | 2 |
| ஜே. வி. பி. | 2 |
| தமிழ் காங்கிரஸ் | 1 |
| மற்றவர்கள் | 6 |
| மொத்தம் | [illegible] |

இத்தேர்தலில் முன்னள் பிரதமர் திரு டபிள்யு. தஹநாயகா வென்றதும் முன்னள் சபாநாயகர் திரு டி. பி. சுபசிங்கா தோற்றதும் குறிப்பிடத்தக்கனவாகும். மற்றும் நாட்டின் பிரதமர் ஒருவர் தமது தொகுதியில் 1,657 அதிகப்படி வாக்குகள் மட்டும் எடுத்து வெற்றி பெறுவது வெட்கக் கேடு. அதைத் தோல்வியென்று சொன்னலும் பொருந்தும்.

கல்வியே [illegible]


சி. சி. சி. நெற்பயிர்

உரக்

கலவைகள்

உலகிலேயே

மிகச் சிறந்தவை

கொழும்பு

கொமேர்ஷல்

கொம்பனி லிமிட்டெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

தபால் பெட்டி 33, கொழும்பு.

OCC 926




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவரசம்பூ!

சிறுகதை — எழுதியவர்: உதயணன்

காலதேவன் கண்ணை மூடிக்கொண்டு ஓடுகிறான். மனித இனம் அவனைத் தொடர்ந்து ஓடுகிறது. எல்லோரும் எக்காலமும் ஒரே பாதையில் ஓட முடியாததால் கிளைப் பாதைகளுக்கும் தாவ வேண்டியிருக்கிறது. சிலர் மீண்டும் சந்திக்கிறார்கள். சிலர் சந்திப்பதே இல்லை. இடைவழியில் எத்தனையோ இன்பங்கள், துன்பங்கள், மாற்றங்கள், ஏமாற்றங்கள்.........

"மங்கையற்கரசி! இத்துடன் வரும் உனது கடிதத்தைக் கண்டு பதறாதே. இனியாவது உன் பாதையை மாற்றிக் கொள். கொள்கையைத் திருத்திக் கொள்........."

கடிதத்தைப் பிரித்ததும் பிரிக்காததுமாக கையெழுத்தைப் பார்த்தேன். "அன்பு மறவாத மங்கையர்க்கரசி" என்றிருந்தது.

மங்கையற்கரசி!

".........எனக்குக் கண்ணம்மா என்ற செல்லப் பெயரை வைத்து வாய் நிறைய கண்ணம்மா கண்ணம்மா என்றழைத்து வளைய வளையவந்தபொழுது ஒருகாலத்தில் நீங்கள் என்னை அடியோடு மறந்து கை கழுவி விடும் நிலை வரும் என்று எதிர்பார்க்கவில்லை. ஆனால் செய்துவிட்டீர்கள்.

".........எனது இன்றைய கோலத்தை நீங்கள் அறிந்திருப்பீர்கள், இந்தப் பரிதாபத்துக்குரிய சமயத்திலாவது நீங்கள் மனமிரங்கி எனக்கு உதவமாட்டீர்களா என்ற ஆவலில்தான் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

"......அன்றைய எனது எண்ணக் கோட்டைகள் இடிந்து தரைமட்டமாகியதோடு நிற்கவில்லை. அவற்றின் எந்தப் பகுதியும் எந்தப் 'புதைபொருள்' ஆராய்ச்சியாளனுக்கும் எட்டாதபடி அமிழ்ந்துவிட்டன.

கடிதத்தை மடித்து வைத்துவிட்டுத் தலையைக் குனிந்துகொண்டேன். எனது சிந்தனை கிளைவிட்டது; தாவிப் பாய்ந்தது; பழைய காலத்துக்கு ஓடியது.

இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு ஓராண்டு முன்னர் என்று நினைக்கிறேன். கோப்பாய் பயிற்சிக் கலாசாலையி பெண்களுக்கு மட்டும் என்ற பெயர்ப் பலகையைத் தொங்கவிட்டு அங்கிருந்த ஆண்களை பலாலிக்கு அனுப்பினார்கள்.

பலாலியில், பயிற்சிக் கலாசாலைக்குச் சிறிது தூரத்தில் உள்ள ஒரு பாடசாலைக்கு நாங்கள் படிப்பித்தல் பயிற்சிக்காகப் போய் வருவதுண்டு; அப்படிப் போகும் பொழுது இன்னொரு பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த மங்கையற்கரசியைக் கண்டேன்.

அவளை முதன் முதலாகப் பார்த்ததும் ஏதோ ஒன்று என் மனதில் குறுகுறுத்தது. இதற்குக் காரணம் எனது இளமைப் பருவத்தின் துடிப்போ, அவளுடைய கொள்ளை அழகின் பிடிப்போ நானறியேன். ஆனால் அவளை அடுத்து இரண்டு மூன்று தினங்கள் அடுத்துக் கண்ட பின்னர் எனக்கு ஒரு சபலம் தட்டியது. ஒரு நாளைக்கு நான் அவளைத் தனியாகச் சந்தித்தால்......?

ஒரு திங்கட்கிழமை என்று நினைக்கிறேன். எல்லா மாணவர்களையும் முன்னதாக அனுப்பிவிட்டு நான் மட்டும் தனியாகச் சென்றேன். வழியில் மங்கையற்கரசி வரவில்லை. அழகுத் தெய்வமே இரட்டைப் பின்னல் போட்டு பாவாடையும் அரைத் தாவணியுமாக வந்தது. நான் அவளைப் பார்த்தேன். அவள் என்னைப் பார்த்தாள். போய்விட்டாள்.

செவ்வாய்க்கிழமை வந்தது. நானும் வந்தேன். அவளும் வந்தாள். நான் நோக்கினேன், அவளும் நோக்கினாள். நகர்ந்துவிட்டாள்!

புதன்கிழமை விடிந்தது. பார்வைப் படலம் முடிந்தது. ஒரு குறுநகையை அவள்பால் நான் ஏவிவிட்டேன். பதில் நகை ஒன்று அவளது மென் உதட்டில் நெளிந்தது. நடுத்தெருவே! எமது அறிமுகத்துக்கு நீயே சாட்சி!.

வியாழக்கிழமை நான் அவளைக் கடக்கும் சமயமாக அவள் தன் பின்னலில் இருந்த ஒரு மலரை எடுத்துத் தெருவில் போட்டுவிட்டு நடந்தாள். நான் அந்த மலரை எடுத்துக் கொண்டு நடந்தேன். பைத்தியம் முற்றிவிட்டதற்கான அறிகுறி இது.

வெள்ளிக்கிழமை நான் அவளோடு ஒரு வார்த்தையாவது பேசிவிட வேண்டும் என்ற ஆவலில் அவளை நெருங்கினேன். முதலில் அவள்தான் பேசினாள்.

"எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும்?" என்றாள். இன்றுக்குள் இருந்து நான் பேசியதில்லை. ஆனால் அந்த அனுபவத்தைப் பெற்றிருக்கிறேன்,

"என்ன?"

"பயிற்சிக் கலாசாலைப் பிரவேசப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்கிறேன், சில புத்தகங்கள் வேண்டும்"

"நாளைக்குச் சனிக்கிழமை வீட்டுக்குக் கொண்டு வருகிறேன்," என்றேனோ நின்றேனோ, நகர்ந்தேனோ—எனது நினைவு என்னிடத்தில் இல்லை.

மறுநாள் நான் சில புத்தகங்களுடன் அவளுடைய வீட்டுப் படலையைத் திறந்த பொழுது, எனது மனம் என்றும் காணாத ஒரு அச்சத்தை உணர்ந்து அடித்துக்கொண்டது. தைரியத்தைத் தேடிப் பிடித்துக்கொண்டு உள்ளே நுழைந்ததும் என்னை எதிர்கொண்டு அழைத்தவள் மங்கையற்கரசியல்ல—அவளுடைய தாயுமல்ல—தாயினுடைய தாய், பேத்தி!

கிழவி என்னை ஒரு வினாக் குறியுடன் நோக்கினாள். 'நீ யார்? யாரைப் பார்க்கிறாய்? என்ன வேண்டும்?' என்ற எத்தனையோ வினாக்கள் அவளுடைய முகத்துத் தளர்ந்த தசையில் தொங்கி நின்றன.

மங்கையற்கரசி...மங்கையற்கரசி...!" என்று ஜெபித்தேன். அந்தக் கிழவி எனக்குத் தரப் போவது ஒரு சாதகமான பதிலோ, அடியோ, திட்டோ என்பது இனிமேல்தான் திட்டவட்டமாகத் தெரிய வேண்டும். அதனால்தான் அப்படித் தடுமாறினேன்.

"அவளிட்டை உனக்கு என்ன அலுவல்?" என்றாள் கிழவி. அவளுடைய முகத்தில் எந்த பாவமும் தெரியவில்லை. அனுபவப்பட்ட கட்டையல்லவா?

[illegible] கேட்டாள். அதுதான் கொண்டு வந்தேன்......

"எடே! நீ அந்த வாத்தியார்ப் பொடியே? அவள் எல்லாம் சொன்னாள். என் தம்பி அவளுக்குக் கொஞ்சக் காலத்துக்குப் பாடம் சொல்லிக் குடுக்கிறியே!"

எனக்குக் கதைகள் என்றால் மிகவும் பிடிக்கும். காதல் கதைகளில் கதாநாயகன் ஒரு ஆசிரியனாகவும், கதாநாயகி ஒரு மாணவியாகவும் இருந்தால், அவர்களுக்குப் பாடம் சொல்லித் தரும் ஒரு கட்டத்தில்தான் காதல் பிறக்க வேண்டும் என்ற சம்பிரதாயம் ஏதாவது இருக்கிறதோ என்னவோ! ஆனால் என் கதையில் அது உண்மையே உண்மை.

நான் பயிற்சிக் கலாசாலையில் இருந்ததால் எனக்குக் கட்டுப்பாடுகள் அதிகம். சாதாரணமாக எல்லாவேளைகளிலும் வெளியே புறப்பட்டுத் திரிய இயலாது. ஆனால், 'கண்ணின் கடைப் பார்வை கன்னியர்கள் காட்டிவிட்டால் மண்ணிற் குமரர்க்கு மாமலையும் ஒரு கடுகாம்' என்ற கவிதை அடியின் போக்கலாகவோ தெயன்று மங்கையர்க்கரசியைச் சந்திக்க—தலது, பாடம் சொல்லித் தர—என்னால் முடிந்த ஒவ்வொரு வழிகளிலும் தயங்காமல் இறங்கினேன்.

[illegible]க்கிழமை காலையில் வீட்டுக்குப் போவதாகச் சொல்லிப் புறப்பட்டால், அவளுடைய வீட்டில் போய்த் தங்கி விட்டு வீட்டுக்குப் போவேன். ஞாயிற்றுக் கிழமை வீட்டிலிருந்து புறப்பட்டு அவளுடைய வீட்டுக்குப் போய்விட்டுக் கலாசாலைக்கு வருவேன். விடுமுறை வந்துவிட்டால் யாழ்ப்பாணத்துக்கும் பலாலிக்கும் இடையில் நானும் எனது பழைய சைக்கிளும் தினசரி போக வர இருபது மைல்களுக்கு நடாத்தும் போராட்டம்—பூ! அது ஒரு போராட்டமா, என்ன?

மங்கையற்கரசியின் வீட்டில் அவளும், அவளுடைய பேத்தியும் மட்டுமே இருந்ததால் எங்கள் நாடகத்தில் வில்லன் காட்சி அமையவில்லை. சாதாரண பேச்சுவார்த்தையில் ஆரம்பித்த எங்கள் உறவு கண்ணை மூடிக்கொண்டு பறந்து ஒரு எல்லைக் கோட்டில் போய் நின்றது. அந்த எல்லைக்கு அங்கஸ்பரிசம் என்று பெயர். அந்த எல்லைக் கோட்டைத் தாண்டிக் குதிக்க ஏனோ எனக்குத் துணிச்சல் வரவில்லை; அதுவும் நல்லதுதான்.

அவள் பயிற்சிப் பிரவேசப் பரீட்சைக்குத் தோன்றினாள். முடிவு தெரிந்த விஷயம்தான். நான் பாடம் சொல்லித் தந்த லட்சணம் அது!

நான் பயிற்சிக் கலாசாலையை விட்டு வெளிவந்தேன்.

(15ம் பக்கம் பார்க்க)

கடிதம்:

## "மறக்குமா இறக்கும் வரை?" கதை மட்ட ரகமானது

நேரமான சிறுகதைகளைப் பிரசுரித்து ஈழத்தில் சிறுகதை இலக்கியத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த பெருமை சுதந்திரன் பத்திரிகை ஒன்றுக்குத்தான் உண்டு.

கடந்த 10-7-60 சுதந்திரன் பத்திரிகையில் வெளியான "மறக்குமா இறக்கும் வரை" என்ற சிறுகதையைப்படித்ததும்இத்தனை மட்டரகமான சிறுகதைகளையும் சுதந்திரன் வெளியிடுகிறதே என்று எண்ணி வருந்த வேண்டியதாகி விட்டது.

தான் வாழும் சூழலைப் பிரதிபலித்து இலக்கியம் படைக்க வேண்டும் என்பதற்காக, மட்டக்களப்புக் கிராமம் ஒன்றில் சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு வாண வேடிக்கை நடத்துவதாக எழுதுவது நம்பக்கூடிய சம்பவமாகுமா? சித்திரை வருடப் பிறப்புக்கு இங்கு யாரும் வாண வேடிக்கை செய்வதை நாம் காணவில்லை. சாதாரணமாக சீனவெடி கொளுத்துவதுதான் வழக்கம். சிறுகதை எழுதியவர் வாணத்தை, சீனவெடி என்று குறிப்பிட்டிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

அடுத்து, எழுத்தாளரின் கற்பனைக் குதிரை கட்டுக்கடங்காமல் ஓடி, வாசகர்களை ஏமாற்றுகிறது. அதாவது கண்ணிரண்டும் கெட்ட ஒரு கன்னியை மணம் முடிக்க எந்த ஒரு இளைஞனும் இலகுவில் சம்மதிக்க மாட்டான். (ஏன் எழுத்தாளர் பொன்னு கூட சம்மதிக்க மாட்டார்.) எழுத்தாளரின் மனநிலைப்படி தெய்வீகக் காதல் காரணமாகவோ தியாகத்தின் உச்சவரம்பு காரணமாகவோ, சீர்திருத்தச் சிந்தனை காரணமாகவோ குமார் என்ற ஆசிரியர் குருடியான சரசுவை மணந்து, அவளுக்கு வாழ்வளித்திருக்கலாம். அத்துடன் கதை முடிந்திருந்தால் இந்தச் சர்ச்சைக்கே இடமில்லாது போயிருக்கும்! ஆனால்......கதை ஓடுகிறது......

மணமானபின் சுரசுவை ஊரார் குருடி என்று பேசுவதை சகித்துக் கொள்ளாத குமார். (குருடி என்று தெரிந்தே மணந்து கொண்ட ஆசிரியர்) அவளை கொழும்புக்குக் கொண்டு போகிறார் சிகிச்சைக்காக. நல்லவேளையாக குமாருடைய நண்பருக்கு நண்பராக இருந்து விடுகிறார் கொழும்பு பெரியாஸ்பத்திரியின் கண் டாக்டர்! இருக்கலாம்...... கண்களை விட ஒரு பெண்ணுக்குக் கணவனே முக்கியம்—குருடியென்று பேசுவதை ஒரு பெண் சகித்துக் கொண்டாலும் தாலி அறுத்தவள் என்று பேசுவதைச் சகிக்கமாட்டாள், என்பதையெல்லாம் அந்த முட்டாள் டாக்டர் அறியாமல் போனது மிக மிக விந்தையானது! கணவனின்றி அவன் கொடுத்த கண்களை வைத்துக்கொண்டு ஒரு தமிழ்ப் பெண் வாழ முடியும் என்று அந்த டாக்டர் நினைத்தாலும் கூட, சுகதேகியான ஒருவனுடைய கண்களைப் பிடுங்கி—அவனைக் கொன்றுவிட்ட குற்றம் தன்னைச் சாரும் என்றாவது அந்த டாக்டர் ஐயா நினைக்காமல் போனது அதிலும் விந்தை! தான் சாக மருந்துண்ணும் இந்த டாக்டரைப் படைத்த எழுத்தாளர்... ஒருவனுடைய சாவிலே... இல்லை கணவனுடைய சாவிலே மனைவிக்கு வாழ்வு! இதற்குப் பெயர் தியாகம்!!

வாழ்வைப் பிரதிபலிக்கும் யதார்த்த இலக்கியம் வளர்கின்ற இந்தக் காலத்தில் இப்படியான கதைகள் அவசியந்தானா? வரட்டுக் கற்பனைகளுக்கு இடம் கொடுத்து இடத்தைப் பாழாக்குவதை விட நல்ல சிறுகதைகளைத் தேர்ந்து வெளியிட்டால் நம்மையும் பிறர் மதிப்பார்கள் அல்லவா?

—அழகேஸ்வரி-நடராஜா,
பெரியநீலாவணை,
கல்முனை 11-7-60.


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர்: 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கைகளுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாழ்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

**பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.**

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

**பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.**

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு ஆளுக்கு 20 மரம் கணக்கு

## மாதம் 300 வரை உழைக்கலாம்

## கள்ளிறக்கும் தொழிலாளி பேட்டி

[பேட்டி கண்டவர்: "மாலதி"]

மேற்கு வானிலே இருள் சூழ ஆரம்பித்தது. எனது நெஞ்சிலே 'திக்' என்றது. துல்லியமாக இருந்த வானம்—அதிலே கதிர் பரப்பி ஒளிபாய்ச்சிப் படவிவந்த பகலவன்-எல்லாம் இத்தனை விரைவாகக் கம்மிப் போவதா? 'பிளாஷ் ஹோல்டர்' கூடக் கொண்டு வரவில்லையே! புகைப்படக் கருவியிலே எனக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. ஆனால் அது மாத்திரம் நிம்மதியாகத் தோளிலே தொங்கிக் கொண்டிருந்தது.

உச்சி வேளையிலே கூட, ஒரு துளி ஒளியை நிலத்திலே படவிடாது குடை பிடித்த தென்னந் தருக்கள் தான் எத்துணை யவ்வனத்தோடு காட்சி தந்தன. சூல் உற்ற புது மணப் பாங்கினர் போன்று அவை மதமதந்து நிமிர்ந்து நின்ற காட்சிகள்! ஆஹா!

அவற்றின் கீழ் ஒரே இருள். இதையெல்லாம் கவனிக்க நேரமற்று, தென்னந் தும்புகள் கட்டப்பட்ட மரங்களில் ஏறி ஏறி இறங்கிக் கொண்டிருந்தார் ஒரு மனிதர்.

கையில் தூக்கணம் மாட்டிய ஒரு முட்டி. இடுப்பிலே ரிவும் சத்திரகன் செருகும் கூடுகள். முகத்திலே அழகான முழு மீசை, உழைப்பால் உரம் கொண்ட புயங்கள். சாதாரண உயரம். இவற்றிற்கு உரிமையாளர் திரு. செல்லப்பா.

மட்டக்களப்பு நகரத்திலிருந்து மேற்கு நோக்கித் திருகோணமலை வீதியால் நடக்கிறோம். நகரவெல்லை விட்டுப் பின் தங்கிவிட்டது. இதோ பிள்ளையாரடி. சில கல்வீடுகள். பல ஓலைக் குடிசைகள். தென்னந் தருக்கள் அடர்ந்த ஒரு வளவிலே நிற்கிறோம்.

இதென்ன? தென்ன மரத்திலே ஒரு விளம்பரப் பலகை. ஓஹோ இதுதான் விவாகப் பதிவுகாரரின் வீடோ?

எத்தனை மரங்களிலே இதற்கிடையில் தாவிக் குதித்து விட்டார் திரு. செல்லப்பா! ஒரு மரமாவது கமராவின் கண்ணுக்குத் தோதாகவில்லையே! இந்த மந்தமான வேளையில் கமரா என்ன செய்யும்? பொல்லாத சூரியன் ஒரு கணம் முகம் காட்டக் கூடாதா?

ஏதோ துணிவு பிறந்தது.

ஒரு வழியாக ஒரு 'கிளிக்' சரி.

கிடு கிடு வென்று செல்லப்பா இறங்கிவிட்டார். அந்த உயர்ந்த மரத்திலே அவர் கறந்த பால் முட்டியிலே நெரு நெருத்தது. நம்பிக்கையில்லாவிட்டாலும் துணிவாக இன்னுமொரு 'கிளிக்' அப்படி! திரும்பினேன்.



இறங்கிய கள் குடத்தில் வார்க்கப்படுவதையும் தொழிலாளி கள்ளிறக்கத் தயாராகச் செல்வதையும் இங்கே காணலாம்.

அந்த வேலியின் பின்னே வைத்த கண் வாங்காது என்னை விழுங்கிக் கொண்டிருந்தது ஒரு மந்தகாச வதனம். யாரது? எப்போதோ எங்கோ பார்த்த முகம். எனக்குப் புரியவில்லை. "என்னை மதிக்கவில்லையா?" என்று தன்னை அறிமுகம் பண்ணினாள் அந்த மங்கை.

'ஓ, நீங்களா? பள்ளிப் பருவத்திலே சின்னஞ் சிறுகளிலே சந்தித்த பிறகு இப்போதுதான் பார்க்கிறேன். அதுவும் குழந்தை குட்டிகளோடு நான் மதிக்கவேயில்லை' என்று ஒருவாறு வியப்பை வெளியிட்டேன். தேநீர் அருந்த வேண்டுமாம். வீட்டுக்குள் வர வேண்டுமாம். எப்படியிருக்கிறது வேடிக்கை? ஏதோ இல்லாத பொல்லாததெல்லாம் கூறி அந்தச் சோதரியிடம் விடை பெற்று திரு. செல்லப்பாவைத் தேடினேன்.

அடேயப்பா! மனிதன் அங்கே போய்விட்டாரே! அந்தச் சிறு வயல் வரம்பால் நடந்து கொண்டிருந்தார் அவர்.

"அண்ணேய்! கொஞ்சம் நில்லுங்கோ! இது என் குரல். அவர் திரும்பினார். ஒரு கிளிக்.

அவர் நடந்து கொண்டிருந்தார். வழி நெடுக நாங்கள் பேசினோம். நான் பேசியது போகட்டும், இதோ அவர் பேசியதை நீங்கள் கேளுங்கள்.

"என்ட பேரா? அப்போதே சொன்னேனே செல்லப்பா என்டு? அப்பாட பேர் கதிரன். எனக்கு வயது நாப்பத்தஞ்சிதான். [illegible] ரெண்டு. பொம்புளையள் அஞ்சு. மனிசிட பேர் இரேசா. எல்லாம் குடும்பத்துல ஒம்பது பேர். ஒரு நாளைக்கு எப்படியெண்டாலும் ஆறு ரூபா சாப்பாட்டுச் செலவுக்கு வேணும். என்னெண்டு மிஞ்சப் போகுது? எல்லாம் கையும் கணக்கும் சரிதான்.

"இது என்ட பரம்பரத் தொழில்தான்; ஏன் வெக்கப்பட? நாம் செய்யிற தொழிலைச் சொல்லுறதுக்கு என்னத்துக்கு வெக்கம்? நான் சொல்லுறன். பொறந்த நாளைக்கு எனக்குக் கள்ளிறக்கிறதான் வேலை. சொந்தமாக இல்ல. எல்லாம் கூலிக்குத்தான். முதலாளியார் மரத்தையெல்லாம் குத்தகைக்கு எடுப்பார். எங்களுக்கு இறக்கிக் குடுக்கிறதுக்குத்தான் கூலி.

"ஒரு கலன் கள் இறக்கிக் கொடுக்க கூலி ஒரு ரூபா ஏழு சதம். இதைத் தவிர பாளை தட்டும் காசாக பதினைந்து நாளுக்கொரு தரம் நாப்பத்தஞ்சு ரூபா கிடைக்கும். அதோட லீவுச் சம்பளம் அஞ்சு ரூபா. எல்லாம் மாதத்துல நூற்றைம்பது தொடக்கம் முந்நூறு ரூபா வரைக்கும் உழைக்கலாம். ஒரு ஆளுக்கு 20 மரம்தான் கணக்கு. ஒவ்வொண்டாக விடியத்திலையும் பின்னேரத்திலயும் ஏறியிறங்க வேணுமே!

"கள்ளிறக்கிறது எப்படியெண்டுதானே கேக்கிறீங்க? சொல்லுறன். முதலில் ஏறுறதுக்கு வசதிக்காக மரத்துல மட்டவச்சிக் கட்டுவம். அதுக்குப் புறகு ஏறி பாளையத் தட்டுவம். ரெண்டாவது நாளும் ஏறி, தட்டி காம்பறுத்துக் குத்துவம். இனி மூண்டாம் நாள் ஏறி சீவவேண்டியதுதான். பிறகு குத்துகிறது, அதன் பிறகும் குத்துகிறது, சீவுகிறது; இப்பிடி, கள்ளிறங்குங்காட்டிலும் குத்திச் சீவவேண்டியதுதான். நல்ல வடிவாகக் கள்ளிறங்க பதினைஞ்சு நாளாவது செல்லும்.

"தட்டிச் சீவி, குத்தி, வரிந்து வளைத்து முட்டியைக் கட்டி வைத்தால் விடியத்திலும் சாயந்தரத்திலும் கள் இறக்க ஏற வேண்டியதுதான் வேலை. ஒரு மரத்துல சராசரியாக ரெண்டு போத்தல் இறக்கலாம். அதுக்குக் கூடவும் இறக்கலாம். அது மரத்தைப் பொறுத்தது. இப்போதைய விலையா? போத்தல் எண்பது சதமாக விலையாகுது."

திரு. செல்லப்பா சொல்லிக் கொண்டே போவார். ஆனால் இருட்டி விட்டது. அவரும் இன்னும் எத்தனை மரங்கள் ஏற வேண்டுமோ? நான் குறுக்கிட்டேன்.

'கள்ளைவிட, பாணி கூட இறக்குவீர்களாமே! அதெப்படி?'

"முட்டியில சுண்ணாம்பப் பூசி கட்டினாப் பாணிதான். பாணியக் காச்சிக் கருப்பட்டி செய்யலாம். கூழ் காச்சப் பாணியச் சில ஆக்கள் தேடி வாங்கு வாங்க. பாணி குடிக்கக் குடிக்க இனிக்கும்"

"அப்போ கள்ளே தேவையில்லையே! பாணியைக் கொண்டே தொகையான கருப்பட்டிகள் செய்யலாமே! அதை விட்டு, கள்ளைக் குடித்து எத்தனையோ தொல்லைகளைப் பாமர மக்கள் விலைக்கு வாங்குகிறார்களே! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்."

"பாணியிறக்கினாலும் கள்ளிறக்கினாலும் எங்களுக்குத் தொழில் தொழில்தான். ஆளக் குடிக்கப் பழக்கினது விடுறது பொறுப்பு. சாராயத்தவிட கள்ளுல கொஞ்சம் நன்மையிருக்குது தான். சில வியாதிகளுக்கு கள்ளு லகவண்ட மருந்து. சில ஆக்கள் இரிக்கிறாங்க, கள்ளுக் குடிச்சா அவங்களுக்கு ஒரு வியாதியுமே வாறதில்ல."


"படிப்படியாக கள்ளைக் குறைத்து பாணி, எடுத்துக் கருப்பட்டி செய்வதிலே ஈடுபடுவது நமது சமூகத்துக்கு நல்லது..."

"அதை நாங்களும் வரவேற்கிறோம். அதில ஈடுபட்டா எங்க ஒத்துழைப்பும் கிடைக்கும்."

"நல்லது. உங்கள் வேலைகளையும் பாராது இந்த விபரங்களைத் தந்ததற்கு சுதந்திரன் சார்பிலே நன்றி. வணக்கம்." திரு. செல்லப்பாவிடம் விடைபெற்றேன்.



பாளை தட்டிப் பின்னர் கட்டி அப்புறம் சீவி முட்டியும் கட்டி பால் விட்டது.



தொழிலாளி செல்லப்பா சர்வ சாதாரணமாக [illegible] ஏறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன் ஆலோசனையை செயல்படுத்தியது

## இலங்கைக் கலைக் கழகம்

## முதன் முறையாக நாட்டிய விழா

## முயற்சி பாராட்டுக்குரியது ஆனல் நிகழ்ச்சிகள் .........?

சுதந்திரன் விடுத்த ஆலோசனையை ஏழு மாதங்கள் கழித்து இலங்கை கலைக் கழகத்தின் தமிழ் நாடக நடனக் குழு செயல்படுத்தியிருக்கிறது. கடந்த 15-ம், 16-ம் தேதிகளில் கறுவாக்காடு மகளிர் கல்லூரியில் நாட்டிய விழா ஒன்றை நடத்தியது குழு.

13-9-59 சுதந்திரனில் இலங்கை கலைக் கழகம் நாட்டிய விழா ஒன்றை நடத்த வேண்டும் என்று ஆலோசனை கூறிப் பின்வருமாறு எழுதியிருந்தோம்:-

"ராமையாவின் நடனத்துக் கம்பீரமும் (Dignity), சந்திரனின் நடனத்துக் கலை அழகும் (Grace), [illegible] வழியின் நடனத்து வசீகரமும் ஏகவுயும் (Sumptuous), குமாரி நிருத்யுமாரசாமியின் நடனத்து உயர்ச்சியும் (Charm) கண்டவர்கள் மறக்க முடியாதவை. வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பார்த்து, ரசித்த இந்த நான்கு அம்சங்களையும் ஓரே சமயத்தில் கண்டு களிக்க வைக்க முடியுமானல் அது பெரிய கலைத்தொண்டு ஆகும், ஆடற் கலைக்கு ஆக்கம் அளித்தது போலவும் ஆகும்.

நேரடியாகச் சொல்வதானல், தற்போதைக்கு இத்தனை கலைஞர்களையும் கொண்டு நாட்டிய விழா ஒன்று வைக்க வேண்டும். விழா ஒருவார காலம் நீடிக்கலாம். இதற்கு "சீஸன் டிக்கட்" களை விற்கலாம். ஒவ்வொரு நாளும் கலைஞர்கள் தனித்தோ, கூட்டாகவோ அல்லது தமது மாணவிகளுடனே பங்குபற்ற வேண்டும். இதனால் கலைக்கு ஆக்கம் தேடலாம். அதோடு இப்போது [illegible] வாரிக்கொண்டு [illegible] இருக்கும் கலைஞர் [illegible] ஒற்றுமையையும், பரஸ்பர ஒத்துழைப்பையும், நல்லவகையான போட்டிகளையும் (Healthy Competitions) ஏற்படுத்தலாம்.

"இந்தப் பணியை இலங்கைக் கலைக் கழகம் முயன்றால் எளிதில் செய்து முடிக்கலாம். தமிழ் நாட்டில் இசை, நாட்டிய, நாடக விழாக்கள் 'சீஸன்' வாரியாக பெரும்பாலும் டிசம்பர் மாதத்தில் நடப்பதுபோல இங்கும் ஏதாவது செய்யக்கூடிய வசதிகளோடு இருக்கும். இலங்கை கலைக் கழகத்துக்கு இந்த ஆலோசனையைச் சமர்ப்பிக்கிறோம். கலை வளர்க்கும் நோக்கம் கொண்ட கழகம் நம் ஆலோசனையைத் தட்டிக்கழிக்க மாட்டாது என்பது எமது நம்பிக்கை"

சுதந்திரன் ஆலோசனைப்படி குறிப்பிட்ட நால்வரையும் ஒரே அரங்குக்குக் கொண்டு வந்து ஒரு வார காலம் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு முன்னேடியாக இப்போது அந்த நால்வரின் மாணவிகளையும் இரண்டு நாள் விழாவில் ஒரே அரங்கில் ஏற்றி இறக்கியிருக்கிறது இலங்கை கலைக் கழகத்தின் தமிழ் நாடக நாட்டியக் குழு. இந்த முயற்சியைப் பெரிதும் பாராட்டுகிறோம்; குழுத் தலைவர் கலாநிதி க. வித்தியானந்தனுக்கும் அவருக்குப் பக்கத்துணையாக நின்று பணியாற்றியவர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்.

முயற்சியைப் பாராட்டும் அதேவேளையில் நிகழ்ச்சிகளை நினைத்தால் சளிக்கிறது மனம். விழாவில் நடந்த நிகழ்ச்சிகள் தரமானவைதாமா? நாட்டிய விழாவில் இடம் பெற லாயக்கானவைதாமா? சுற்றி வளைக்காமல் நேரடியாகச் சொல்வதானல் முதல்நாள் நடந்த நிகழ்ச்சிகள் எவரையும் அடுத்த நாள் விழாவுக்கு செல்லத் தூண்டுவனவாக அமையவில்லை. அன்று பத்மினி தஹநாயகாவின் ஆட்டமும் இல்லாதிருந்தால் விழா வெற்றி விழாவாக அல்ல, வெற்று விழாவாகவே முடிந்திருக்கும். அது இருந்தும்கூட அப்படி ஒன்றும் அதிகமாக வித்தியாசம் ஏற்பட்டுவிடவில்லை.

கலாநிதி க. வித்தியானந்தன் தமது வரவேற்புரையில் பரதநாட்டியத்தின் அருமை பெருமையையும் கிராமிய நடனங்களின் சிறப்பையும் எடுத்துரைத்ததோடு பின்வரும் குறிப்பையும் சொன்னர்:-

"இலங்கைக் கலைக் கழகம் நிறுவப்பட்ட காலத்திலிருந்து இலங்கை நாடக நடனக் குழு தமிழ் நாடகக் குழுவாகவே கடமையாற்றி வந்தது.

"இவ்வாண்டில் இலங்கைக் கலைக் கழகத்தின் குழுக்களைத் திருத்தி அமைத்தபோது நடனத்தையும் உடன் சேர்த்து தமிழ் நாடக நடனக் குழு எனப் பெயரிட்டு வழங்கினர். எனவே இக்குழு நடத்தும் முதல் நாட்டிய விழா இதுவே.

"இவ்விழாவில் எத்தனையோ குற்றங் குறைகள் இருக்கும். எதுவும் வேண்டுமென்ச் செய்யப்பட்டிராது. குறைகளைப் பொறுப்பது பெரியோர்களாகிய உங்களது கடன்.

"இவ்விழாவில் கிராமிய நடனங்களும் இடம்பெறுகின்றன. பல நூற்றாண்டுகளாகக் கிராமிய நடனம் பொதுமக்களுடைய சமுதாய வாழ்வில் சிறந்த இடம் பெற்றிருக்கின்றது. கிராமிய நடனத்துக்கு தேசிய முக்கியத்துவம் உண்டு. அது ஓர் அழகுக் கலை. நாட்டு மக்களது எண்ணக் கருத்துக்களைப் பிரதிபலிப்பது கிராமிய நாட்டியக் கலை. மக்களின் குணச் சிறப்பு, கலை, பண்பாடு, கொள்கை, வாழ்க்கை முறை முதலியனவற்றை எடுத்து விளக்குவன கிராமிய நடனங்கள்"

இவ்வாறு கலாநிதி க. வித்தியானந்தன் கூறினர்.

பேச்சுக்குப் பின்னல் கிராமிய நடனங்களான காவடி நடனமும் கரக ஆட்டமும் வந்தன. கலாநிதி சொன்னவைகளுக் அந்த காண முடியவில்லை, ஒரே ஏமாற்றம் மேடையில் தோன்றியது. சில சர்க்கஸ் வீரர்களோ என்று எண்ண வேண்டியதாயிற்று. காவடியைத் தோளிலும், முதுகிலும் தலையிலும் வைத்து அது , விழாதபடி அங்கு மிங்கு அசைத்து Balance பண்ணுவதுதான் காவடி ஆட்டமா? இந்த விதத்தில் காவடிக்குப் பதிலாகக் கரகத்தை வைத்து [illegible]

காவடி ஆட்டம் என்றால் கால் மிதிப்பதில்தான் விஷயம் அதிகமிருக்கிறது. தாளக்கட்டுக்கு 'திருநிகெ'ன்று கால் வைத்து ஆடினல்தான் ஆட்டம் சோபிக்கும். இன்னும் குறிப்பாக காவடிச் சிந்து அழகாகப் பண்ணேடு பாட ஆடுவதானல் ஆஹா, எப்படியிருக்கும்? அதேபோலத்தான் கரக ஆட்டமும். காக ஆட்டத்துக்கென்று தனியாக அர்மன் காளயங்களும் உண்டு. அதைப் பாட ஆடுவதானல் சோபிதமாயிருக்கும். சும்மா சர்க்கஸ் வித்தை காட்டுவது கிராமிய நடனம் ஆடியது ஆகாது.

காவடி ஆட்டம் கொழும்பு கணபதி வித்தியாலய மாணவர்கள் ஆடப் பார்த்தோம் கரக ஆட்டம் கொழும்பு விவேகானந்த வித்தியாலயச் சிறுர்கள் ஆடப் பார்த்தோம். விழாவில் ஆடியவர்கள் இவர்களின் ஆட்டத்தைப் பார்த்திருந்தால் தாம் விழாவில் ஆடச் சம்மதித்திருப்பார்களோ என்னவோ!

இதேபோல நாக நடனம் ஒன்றும் பலதடவை பார்த்திருக்கிறேம். நடனக் கலைஞர்களான திருவாளர்கள் வீரகத்தி, நவரத்தினம், கக்கடு என்ற மூவர் சேர்ந்து ஆடும் நடனம் அது. அற்புதமான ஆட்டம். அதையும் விழாவில் சேர்த்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் அல்லவா என்று விழாவை ஏற்பாடு செய்தவர்களை வினவிய விடத்து, "அப்படி ஒன்று இருப்பதாகத் தெரியாமல்போய்விட்டதே; சரி, அடுத்த விழாவில் அதையும் வைத்துக்கொள்வோம்" என்றர்கள்.


"இலங்கை கலைக் கழகத்தின் தமிழ் நாடக நாட்டியக் குழுவுக்கு இப்படி நன்றாக ஆடக்கூடியவர்கள் இருப்பதும் அவர்கள் அடிக்கடி நிகழ்ச்சிகள் நடத்துவதும் அந் நிகழ்ச்சிகளைப்பற்றிய விவரங்களும் படங்களும் தினப் பத்திரிகைகளில் வருவதும், தெரியாவிட்டால் வேறு என்னதான் தெரியும்?"-இப்படிக் கேட்டு குழுவினரை நாம் அதைரியப்படுத்த விரும்பவில்லை.

நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையில் விழா 'சப்' என்று போய்விட்டாலும், முதல் முயற்சிதானே பரவாயில்லை. சரி இனி இரண்டாவது முயற்சியாவது சிறப்பாக இருக்கட்டும். அதற்கு நாட்டியக் கலைஞர்கள் நிரம்ப ஒத்துழைப்பு நல்க வேண்டும். இம்முறை யாழ்ப்பாணம் நந்திகேஸ்வரா நாட்டியாலயம் விழாவில் கலந்து கொள்ள அழைப்பு அனுப்பி அதிக நாட்களாக முடியும் முடியாது என்று எதுவும் சொல்லாமல் இருந்துவிட்டு கடைசி நேரத்தில் கையை விரித்துவிட்டதாகத் தெரிகிறது. இது கூடாது. கண்டிக்கப்பட வேண்டியது. இப்படியான நெருக்கடிக்குள்தான் விழா நடத்தப்பட்டிருக்கிறது. எனவே பாராட்டு இரட்டிப்பாகிறது.

—கே. கே. ஆர்.


# மொரிஸன் பம்புகள்

24th June



நெருக்கிப் பொருத்திய விசையத்திற்குரிய பம்புகள் [illegible] நாமே இயக்கவும், [illegible] [illegible] உத்தரவாதமுள்ளவை.

1½, 2, 3½ அங்குல அளவுகளில் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்!

கே. என். அப்துல் காதர் ராவுத்தர்

அன் கம்பெனி லிமிட்டெட்,

312, [illegible] ரோடு தெற்கு, கொழும்பு-10.

டெலிபோன்: 2956. தந்தி: MEDAL.

[illegible] விநியோகஸ்தர்கள்

ராஜா ஸ்டோர்ஸ், 4/B, [illegible] ரோட், யாழ்ப்பாணம்.


# அதிசயத் திருடன்

## சினிமா விமர்சனம்

"அதிசயத் திருடன்" என்ற படத்திலே எல்லாம் அதிசயம் தான். சும்மா பாருங்களேன்—இந்தப் படத்தில் மகாராஜா தங்கவேலு, மகாராணி முத்துலட்சுமி, மந்திரி பாலையா, திருடன் ஜெமினி கணேசன் திருடனுடைய காதலி சாவித்திரி, இத்தனைபேரும் இப்படியான பாத்திரங்களில் வந்தால் சும்மா விடுவார்களா?

இடைவேளை வரை சுமாராக ஓடிக்கொண்டிருந்த படம் அதன் பின்னர் விறுவிறு என்று போகிறது. கதை அமைப்பு அப்படி. இடை வேளைக்குப் பின்னர் 'சஸ்பென்ஸ்', 'கிளைமாக்ஸ்' எல்லாம் வந்து ரஸிகர்களை நிமிர்ந்திருந்து படத்தைப் பார்க்க வைக்கின்றன.

சாமியாரின் போதனையைக் கேட்டு பொய் சொல்லும் வழக்கத்தை திருடன் விட்டுவிட்டு யார் யாரிடமெல்லாமோ மாட்டிக் கொள்வதும் தான்தான் திருடன் என்று சொல்லிக் கொண்டு திரிவதும், காதலியின் வேண்டுகோளுக்கு இணங்கித் திருட்டுத் தொழிலை விட்டுவிடுவதும் எல்லாம் பார்க்க ரஸமான கட்டங்கள்.

மகாராணி முத்துலட்சுமி மகாராஜா தங்கவேலுவுக்கு பாத பூஜை செய்வது பலே ஜோர். அதை விட ஜோர் தங்கவேலு குருட்டுக் கிழவன் வேஷத்தில் திருடனேடு சேர்ந்து கொள்வதும் [illegible] யில் அகப்படுவதும் கடைசியில் உண்மையைச் சொல்லித் திருடனுக்கு மந்திரி பதவி கொடுப்பதும்.

இந்தப் படத்தில் பாலையாவையும் நாம் மறந்துவிட முடியாது.

தஞ்சை ராமையாதாஸின் பாடல்கள் பரவாயில்லை. டைரக்‌ஷன் பி. புல்லையா. பார்த்து ரஸிக்கக் கூடிய படம். கொழும்பு கிங்ஸ்லியிலும் சினிபாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் மற்றும் சில தியேட்டர்களிலும் காண்பிக்கிறார்கள்.

## சைப்ரஸ்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கர் 70ம் துருக்கியர் 30ம் என்ற விகிதம் சட்டத்தில் காட்டப்பட்டிருக்கிறது. ஆனல் இராணுவத்தில் 60 கிரேக்கரும் 40 துருக்கியரும் என்ற விகிதம் காட்டப்பட்டிருக்கிறது.

ஆகஸ்ட் 16-ல் பிரிட்டன் சைப்பிரஸை விட்டு வெளியேறும். ஆனல் 99 சதுர மைல் பரப்பில் தளம் மட்டும் வைத்துக்கொள்ளும்; அதுவும் யுத்த காலத்தில் மட்டும் உபயோகப்படுத்தப்படும். இது உடன்பாடு.

சுதந்திர இயக்கம் நடத்தியதற்காக பிரிட்டிஷாரால் துரோகி என்று தூற்றி எவர் நாடுகடத்தப்பட்டாரோ அவரே சைப்பிரஸ் சுதந்திரக் குடியரசில் முதல் தலைவராகிறார். அவர்தான் மக்காரியஸ் பாதிரியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பணம்"

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் நான் உனக்கு ஒரு போதும் அடிமையாக மாட்டேன்.

இன்று உலகமே நீ, நீயே உலகம் நீ ஒரு சாராருக்குச் சாதகமாய் இராதே ' அப்பொழுது தான் நீ.

"நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம் பழுத்தற்று"

என்ற வள்ளுவன் வாய்மொழியிலிருந்து தப்புவாய் வழுச் சொல்லிலிருந்து வழுவிவிடுவாய். அப்பொழுது உன்னை தரணி புகழும். அப்புகழ் கண்டு பொங்கி எழாமல் இருப்பதே மேல் அதுவே என் வேண்டுகோள்.

நன்றாய் இருக்கிறதே உன் புரட்சி நடை என்று கூறிக்கொண்டு கட்டுரையையும் கரத்திலேந்திக் கொண்டு கிளம்பி விட்டான், நான் அவன் போன திசையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

—"புரட்சிபுகன்"
மட்டுநகர்.

## மிருக முன்னணி...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வகுப்பைச் சேர்ந்த மாடர்களுக்குக் கூட உழவுத் தொழில் இருக்கிறது. சந்திரமண்டலத்தை முதல் அடைகின்ற பெருமை ஒரு அமெரிக்கனுக்கோ, ஒரு ருஷ்யனுக்கோ தான் கிடைக்குமென்று போட்டியிடுகின்றனர். ஆனால் நான் நிச்சயமாகக் கூறுவேன், சந்திர மண்டலத்தை முதலில் சென்றடையப் போவது நமது மிருக வர்க்கத்தைச் சேர்ந்த ஒருவன் தான்"

(கரகோஷம் வானைப் பிளக்கிறது)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லாம்.கால் முறியலாம். என் ரூஹுப 1947-ல் உருவான சுதந்திரத்திற்கு மூல காரணம் 1921-ல் சட்ட மறுப்பு இயக்கம், 1931-ல் சத்தியாக்கிரகம், 1942-ல் புரட்சி என்பதை நீங்கள் மறந்து விடக் கூடாது நாங்கள் செய்கிற இந்தப் போராட்டத்தின் விளைவு நாட்டு மக்கள் விடுதலை பெறுகின்ற கட்டத்தில் வந்து நிறுத்தும் என்பதை நான் ஆட்சியாளருக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் கூறினர்.

# தமிழ் நாடு குமுறுகிறது-

## கண்ணதாசன் பேச்சு

நாம் நடத்துகிற இந்தி எதிர்ப்புப் போராட்டம் சர்வ சாதாரணமாக இருக்காது முதல் நாள் என் தலைமையிலே போராட்டம் நடந்து நான் சிறைக்குச் சென்றால் அடுத்த நாள் ஆசைத்தம்பி, சம்பத், கருணாநிதி இப்படி ஒவ்வொருவராகப் புற்றீசல் போலப் புறப்பட்டுக் கொண்டே இருப்பார்கள். இந்தி இந்த நாட்டை விட்டுப் போகும் வரை ஓயாமல் போராட்டம் நடத்திக் கொண்டே யிருப்போம்.

### இனத்துரோகிகள்

துப்பாக்கி யிருக்கிறது சுட்டுத் தள்ளுவேன் என்று காமராசர் தலைக்குத் தானே தைரியப் படுத்திக் கொள்கிறார். பொலீஸ் அமைச்சர் பக்தவத்சலம் முதுகளத்தூரில் சுட்டுத் தள்ளியதைப் போல் சுட்டுத் தள்ளுவேன் என்ற வெறிச் செயலோடு பேசியிருக்கிறார், துப்பாக்கி காட்டுகிற அமைச்சர்களுக்குச் சொல்லுகிறேன்; உங்களிடத்தில் இருப்பது இரண்டு லட்சம் துப்பாக்கி கள்; எங்களிடத்திலே இருப்பது மூன்று லட்சம் மார்புகள், நீங்கள் சுடுகின்ற அந்த இரண்டு லட்சம் துப்பாக்கிகளுக்கு இரண்டு லட்சம் பேர் பலியானால், மிஞ்சியிருக்கிற ஒரு லட்சம் பேர் இந்த ஆட்சியிலிருக்கிற இனத்துரோகிகளை நாட்டைவிட்டு வெளியேற்றுவார்கள் என்பதை நீங்கள் மறந்து விடாதீர்கள்"

இவ்வாறு கவிஞர் கண்ணதாசன் கூறினர்.


எதிர்பாருங்கள் வெகு விரைவில்!

சிலோன் எண்டடெயின்மென்ட்ஸ் திரைகளில்

எஸ். எஸ். ராஜேந்திரன்—ராஜசுலோசனா
பாலையா—வி. கே. ராமசாமி—வி. ஆர். ராஜகோபால்
நடிக்கும்

சங்கிலித் தேவன்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
முருகன் (ஜிந்துப்பிட்டி)
ஏ. நாகேஸ்வரராவ்-சாவித்திரி
நம்பியார்-ரங்கராவ்
நடித்த
தேவதாஸ்
பார்க்கத் தவறியவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் இன்றே சென்று பார்த்து மகிழுங்கள்.

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
ராணி (யாழ்ப்பாணம்)
என். டி. ராமராவ்—தேவிகா
ரேலங்கி—ஆர். நாகேஸ்வரராவ்
கிரிஜா-மாலினி-எம். என். ராஜம்
நடித்த
சபாஸ் ராமு

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
ராஜேஸ்வரா
(மட்டக்களப்பு)
எஸ். எஸ். ராஜேந்திரன்
எஸ். மனோகர், ராஜசுலோசனா,
எம். என். ராஜம், பாலையா
நடித்த
புதுமைப் பெண்

ஜுலை 29-ம் திகதி
வெள்ளி முதல்
குதூகலமான ஆரம்பம்
எல்பின்ஸ்டன்
[மருதானை]
ரொக்ஸி
[வெள்ளவத்தை]
மைனாவதி—இராமநாதன்
சூரியகலா—சகஸ்ரநாமம்
நடிக்கும்

"கண் திறந்தது"




இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
4-வது வாரம்!
எல்பின்ஸ்டன் (மருதானை)
எம். ஜி. ராமச்சந்திரன்—ஜமுனா
நடிக்கும்
தாய் மகளுக்கு கட்டிய தாலி

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
3-வது வாரம்!
கெயிட்டி.
தியாகராஜபாகவதர்—ராஜகுமாரி
நடிக்கும்
ஹரிதாஸ்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
2-வது வாரம்!
செல்லமஹால்
எம். எஸ். சுப்புலட்சுமி,
கிருஷ்ணன், மதுரம்
நடிக்கும்
சகுந்தலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அருமைத் தாய்

என் அன்பார்ந்த அம்மா! எனது இரண்டு தெய்வங்களில் ஒரு தெய்வம் அப்பா, மறு தெய்வம் நீதானே? அதிலும் முதலிடம் உனக்கல்லவா? நீ இல்லாவிடில் யான் வருவதேது?

நீ செய்த பணிகளைப் பற்றி-நீ பட்ட துன்பங்களைப் பற்றி எண்ணிப் பார்க்கின்றபோதில் என் நெஞ்சம் உருகுகின்றதே! கண்களில் நீர் பெருகுகின்றதே! ஒரு பிள்ளையைப் பெறுவதற்கு நீ என்ன பாடுகள் பட்டிருப்பாய்! பத்து மாதம் சுமந்திருக்கிறாய், நல்ல உணவின்றி-நல்லுறக்கமின்றி எத்தனை நாள் வாடியிருப்பாய் என்னென்ன வேதனைகள் அடைந்திருப்பாய். தேர்ந்த வருது பாலூட்டி எனையில் வளர்த்துச் சீராட்டித் தூங்க வைத்து நீயும் பக்கத்திலேயே தூங்கியிருப்பாய். இடையில் அழுதால் உன் உயிர்போவதுபோல் உணர்ந்த தூக்கத்தையும் பாராது எழும்பி எவ்வளவு பாடுபட்டு அழுகையை மாற்றிருப்பாய்? மலசலம் வந்த வேளையிலெல்லாம் அருவருப்பின்றித் தூய்மை செய்திருப்பாய். பிள்ளைகட்கு ஏதும் நோய்கள் வந்துவிட்டால் உடல் பதறி உடனே வேண்டிய மருந்துகள் செய்து மாற்றியிருப்பாய். வேளாவேளையில் குளிப்பாட்டி, உடை மாற்றி, உண ஊட்டி செந்தமிழ்ப் பண் பாடித் தூங்க வைத்திருப்பாய். கண்மணிபோற் கருதி வளர்த்திருப்பாயே?

அம்மா உன் உயிர்போற் பேணி வளர்த்த உனக்கு யான் என்ன செய்யப் போகின்றேன்? உன் நல்ல நெஞ்சினுதித்த பேரன்பைக் கொட்டி வளர்த்த உனக்கு நான் செய்யும் கைமாறு யாது?

என் அன்புத் தாயாரே! என்னைப் படைத்த தெய்வத் தமிழ் அன்னையே! என் அருமை அம்மாவே நீ எனக்காக எவ்வளவு துன்பங்கள் அடைந்துள்ளாய். நீ எனக்குச் செய்தவற்றுக்கெல்லாம் நீ உயிருடன் இருக்கும் போதே யான் பதில் கடமை செய்ய வேண்டுமல்லவா? எடபடி-எதைச் செய்வேன்? செய்யாவிடில் யான் நன்றி கொன்றவனு வேனே? எனவே, அம்மா! கொஞ்சம் பொறு, படித்துப் புகழோடு சான்றோன் என ஊர் புகழ வாழ்கின்றேன் நீ இன்புறு. உனக்குக் குறை வரவிடேன், இது உறுதி.

—"தாமரைத்தேவான்"
மலைவீடு.

# "பணம்"

ஹலோ! புரட்சியுகன் "குடைவினிங்" என்னுடைய 'ஆட்டிக்கல்' முடிந்ததா? என்று வினு எழுப்பி அறையினுள் நுழைந்தான் யோசப். ஓ! யோவா? அது தானே இந்த நேரத்தில் யாரடா தமிழைக் கொலை செய்கிறவன் என்று பார்த்தேன். உன்னுடைய விடையம் இப்போதான் முற்றுப் பெற்றது. இதோ! பருகிப் பார் என்றேன்.

"பணம் பந்தியிலே குலம் குப்பையிலே; ஈட்டி எட்டிய மட்டும் பாயும் பணம் பாதாளம் மட்டும் பாயும்—பணம் பத்தும் செய்யும்" என்றெல்லாம் பணத்திற்கு விருதுரைத்தோர் விவேகிகள். பணந்தான் அவனியிலே பவனி வருகிறது. உலகம் என்ற தேர் பணம் என்ற மசையினுல் உருளுகிறது. அன்று பாதாளம் மட்டும் பாய்ந்த பணம் இன்று பரலோகம் மட்டும் பாயத்தொடங்கி விட்டது. பரமனுக்குப் பாத பூசை செய்வதற்கும் பணந்தான் முந்திநிற்கிறது.

பணம்—மோகன மாமன் மூன்றெழுத்தழகி— முட்டாளின் மஞ்சத்திலே கொஞ்சுவாள்—மூடனின் கையிலே சிக்குவாள்—படித்தவனைப் பம்பரம்போல் சுழற்றி விடுவாள்—பஞ்சையைத் துடிக்க விடுவாள்—பாசத்தைத் துண்டிப்பாள்— நேசத்தைக் கண்டிப்பாள்—தெய்வீகத் திரை போட்டுக் கொள்வாள்—தியாகி வேடத்திலே திருட்டுச் சதி ஆடுவாள்—அந்தக் கன்னியின் ஆட்டத்திலே கணணி முந்தோர் கணக்கற்றோர், என்று கூறுகிறார் கலைஞர் கருணாநிதி.

பணமின்றேல் பிணம் என்ற நிலைக்கு மனித சமுகம் வளர்ந்து விட்டது. நாணயம் இல்லாதவன் நானிலத்தில் நடைப்பிணம் என்ற அளவிற்கு நாணயம் நாசமாகி விட்டது. எந்தத் துறையிலும் பணந்தான் தரகர் வேலை பார்க்கிறது. பாட்டாளி பணத்திற்காகப் பகல் முழுதும் மாடாய் உழைக்கிறான். ஆனால் கிடைப்பது கடைவயிற்றை கழுவ இயலாத நிலை.

பாட்டாளி ஆலையிலே பாடுபடுகிறான். ஆனால், சோலையிலே தென்றலைச் சுவைத்துக் கொண்டிருக்கும் சோதாக் கும்பலிடம் கலை கலையாக சென்று சேர்கிறது பணம். தொழிலாளி இங்கே சொட்டுச் சொட்டாக இரத்தத்தைச் சிந்துகிறான் அது முதலாளியிடம் கட்டுக் கட்டான கரன்சி நோட்டாக மாறுகிறது.

பணமே! நீ வாழி! ஏனெனில் பல பேரிடத்திலும் நீ வாழப் பழகிக் கொண்டாய் பாவையின் பகட்டு வாழ்விற்கு நீ பக்கத் துணையாயிருக்கிறாய் இந்தக் காட்டை இன்பபுரியாக்க—பல முகட்டை மாடமாளிகையாக்க மாளிகை வாசிகளுக்கு இன்பத்தின் எல்லையைக் காட்ட— ஆகாயத்திலே கோட்டை கட்ட—அந்தரத்தில் சஞ்சரிக்க—அரசியல் துறையில் முறை தவற வைக்க—மக்கள் வாங்கவும் விற்கவும் கூட உன்னுல் முடியும் அப்பனே.

(13-ம் பக்கம் பார்க்க)

வள்ளுவர் குரள்: 29

# செந்தண்மை அந்தணர்

உலகிலே பிறங்கிய பெருமையை உடையவர்கள், அறத்தினை மேற்கொண்டாராகிய துறந்தவர்களே. நற்பண்புகள் பலவும் நிறைந்தோராதலினுல், பெருமையாகப் புகழ்ந்து போற்றப்படுகிறார்கள் அவர்கள். ஒழுக்கத்தில் நிலைத்து நின்று பற்றுக்களை விட்டு, வாழ்க்கைக் கூறுகளையும் புலன்களின் அளவைகளையும் உலகின் இயல்புகளையும் ஆராய்ந்து அறிந்து பெரியோராகி, நிறைமொழி மாந்தராய்க் குணமென்னும் குன்றேறி நின்றவர்களும் அவர்களே.

அத்துணைச் சிறப்பு மிக்க துறந்தார், எல்லா உயிர்களிடத்தும் செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகுபவர்கள். அதனுல், அந்தணர்—அழகிய தண்ணளி உடையவர்கள்—என்று சிறப்பித்துச் சொல்லப் படுபவர்களும் அவர்களே.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்"

அந்தணர் என்னும் அரிய சொல், பிறப்பினுல் தாங்கள் உயர்ந்தோர் எனக் கருதும் ஒரு குறிப்பிட்ட சாதியினரைக் குறிக்காது; எல்லா உயிர்கள் மேலும் செவ்விய அருளை விரதமாக மேற்கொண்டு ஒழுகும் ஒழுக்கத்து நீத்த அறவோரையே குறிப்பிடும் என்பது பெருநாவலரின் திரு மொழியாகும்.

—பா. ஆறுமுகம்.

# குணம் நாடி குற்றத்தை மறக்க

நாம் ஒன்றைச் செய்கிறோம்; நம்முடன் பலர் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமும் பல நல்லியல்புகளும் குறைபாடுகளும் இருப்பது இயற்கை. குறைகளே இல்லாமல் எல்லாம் குணங்களாகவே இருந்தால் உலகிற்கு உருவமே இல்லாதுபோய் விடும். வெள்ளைக் காகிதத்தில் எல்லாம் வெள்ளையாயிருந்தால் சித்திரம் எவ்வாறு தெரியும்? கறுப்பும் வெள்ளையும் நிழலும் ஒளியும் சேர்ந்திருக்கும் பொழுதே நாம் உருவத்தைக் காண்கிறோம். எனவே, குறைபாடுகள் இருப்பதனுல்தான் நல்லியல்புகள் நமக்குத் தெரிய வருகின்றன. நல்லியல்பு ஒவ்வொன்றுடனும் குறையொன்று இருக்கவே செய்யும். ஆனுல் சிலசமயங்களில் குறைகள் எல்லை மீறிப் போவதால், தொல்லை தருகின்றன; எல்லையைக் கடக்காமல் நிழலைப் போல் இருந்து வந்தால், அவற்றினுல் நல்லியல்புகள் ஒளிபெற்றுத் திகழும். எனவே, நிதானந் தவறு குறைபாடுகள் வரம்பை மீறுமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

நாம் பிறரது குறைகளையே பார்த்துக் கொண்டிருந்தால், பெரிய தவறு செய்தவர்களாவோம். ஏனெனில், குணத்தையோ குறையையோ அளந்து எடைபோட்டு அறிவதற்கு நம்மிடம் தராசு எதுவுமில்லை. எனவே, நம்மிடம் குறையிருப்பதாய்த் தெரிந்தால், அதை அப்படியே ஏற்றுக்கொள்ளவும் பிறர் குறைகளை மறக்கவும் வேண்டும். நம் கண்ணுக்கு நன்றாய்த் தெரிகிறது, தாங்களே பார்த்ததாய் நம்மிடம் பிறர் சொல்லுகிறார்கள். அவற்றை எப்படி நம்பாமலிருப்பது?' என்று நீங்கள் கேட்கலாம்.

ஒருவர் நம்மிடம் வந்து தம்மிடம் இன்னின்ன குறைகள் இருக்கின்றன என்று சொல்லும் பொழுது நாம் அவற்றில் நம்பிக்கை கொள்ளாமல் அவரது குணங்களிலேயே நம்பிக்கைகொண்டிருந்தால் நமது ஆற்றல் பெருகும். ஒருவர் தாமே தம் குறைகளை வெளியிடாமல் அவற்றை நம்புவதில் தவறில்லை. நம்புவதனுல் அவரது குறைகள் நீங்குவதற்கு உதவி பவராவோம். ஆனுல் ஒருவர் தம் வாயாலேயே என்னிடம் இன்ன குறையிருக்கிறது என்று சொல்லும் பொழுது, 'ஐயா, உம்மிடம் அது ஒன்றுமில்லை' என்று சொல்லக்கூடியவர்களாய் நாம் இருத்தல் வேண்டும்.

இந்நிலையை அடைவது இக்காலத்திற்கு மிகவும் இன்றியமையாதது. உபநிடதங்கள் நமக்கு வழி சொல்லிக்கொடுக்கின்றன நாம் உபநிடதங்களிடம் சென்று "நாங்கள் பாவிகள்; எங்களிடம் குறைகளிருக்கின்றன; இவற்றைப் போக்க வேண்டும் இவற்றிலிருந்து வெளியேற, தாயே! எங்களுக்கு வழி சொல்!" என்று வேண்டிக் கொள்கையில் அவை நீ பாவியாவது, இது வெறும் கற்பனை, பொய் என்று சொல்லுகின்றன. பிறமத நூல்கள் "நீ பாவி; பாவத்தைப் போக்குவதற்கு இன்னின்ன பிராயச்சித்தம் செய்" என்று சொல்ல, உபநிடதங்களோ, நீ உன்னைப் பற்றி எண்ணிக்கொண்டிருப்பதே தவறு. நீ பாவியல்ல; பிரம்மம்" என்கிறது.

மனிதன் முன்னேறுவதற்குப் பெரிதும் உதவும் அற்புதமான வழி இது. நாம் பரஸ்பரம் அன்புடன், நம்பிக்கையுடன் பழக வேண்டும். அவ்வாறு பழகினுல், நாம் எவ்வளவோ காரியங்களைச் சாதிக்கலாம்.

—விநோபாஜி

புறநானூற்றுக் கட்டுரை:

# "ஒளவையின் அறிவு"

—மதியழகன்—

அதிகமான் தனது எதிரியாகிய தொண்டைமானிடம் ஒளவையாரைத் தூதாக ஒரு முறை அனுப்பியிருந்தான். தன்னிடம் வந்த ஒளவையாரைத் தொண்டைமான் தனது படைக்கலக் கொட்டிலுக்கு அழைத்துச் சென்றான். படைக்கலங்களைக் காண்பித்தான். ஒளவையார் தொண்டைமானின் உள்ளக் கிடக்கையை எப்படியோ அறிந்து விட்டார். அடுத்து—

"அரசனே! இவை நான்பீலி யணியப்பட்டு மாலை சூட்டி உடலின் திரண்ட வலிய காம்பை அழகுபடச் செய்யப்பட்டுக் காவலையுடைய அகன்ற கோயிலிடத்தனவாக யிருக்கின்றன. அதிகமான் படைக்கலங்களோ? அவை பகைவரைக் குத்துதலால் கங்கும் நுனியும் முறிந்து கொல்லனது பணிக்களரியாகிய—குறிய கொட்டிலிடத்தனவாகவிருக்கின்றன" என்றார் ஒளவையார்.

ஒளவையின் அமுதப் பாவின் கண்மிளிரும் பழிப்புப் படித்த கணமே எம்மால் அறிய முடிவதில்லை. சற்று ஊன்றிப் படித்த பின்பே கருத்தாழத்தைக் காண முடிகிறது.

தொண்டைமானது படைக் கலங்கள் அழகாக நெய் பூசப்பட்டுப் பளபளக்கின்றன என்றால்......, அவன் ஒருபோதும் போர்க்களம் புகாதவன் என்பதை ஆயுதங்களின் புதுமை மூலமன்றோ காட்டி அவன் படைச் செருக்கைப் பழிக்கின்றார். இதனுல் தொண்டைமான் பயந்தவன் என்பதைச் சொல்லாமலே சொல்லிக் காட்டுகிறார். இதை இழிவு சிறப்பெனலாமோ!

அதிகமான் ஒரு வீரன். போர் செய்தலே அவனது தொழில். எதிரிகளைக் கொன்று குவித்திருக்கிறான். அதனுல் ஆயுதப் படைக்கலங்கள் பழுது பட்டுக் கொல்லன் பட்டடையிலே கிடக்கின்றன. இவை சிறந்த போர் வீரன் அதிகமான் என்பதைக் காட்டா நிற்கிறது ஆம்! இதை வஞ்சகப் புகழ்ச்சியணி யென்றால்...... "ஒளவையின் அறிவு" தான் என்ன! சரி இதோ! புறநானூற்றுக் கவிதை கடி மணம் பரப்புகிறது.

"இவ்வே பீலி யணிந்து
மாலை சூட்டிக்
கண்திரள் நோன் காழ்
திருத்தி நெய்யணிந்து
கடியுடை வியனக ரவ்வே
யவ்வே
பகைவர்க் குத்திக் கோடு,
நுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில
மாதோ... ..."

—புறநானூறு

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும்.

## வளர்மதி
## சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 2.

பெயர்..........................................................

பாடசாலை ..................................................

விலாசம் ....................................................

..................................................

.................................. ..................................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைய என்ன செய்யலாம்?

## ‘கலைஞர்கள் தமது நிகழ்ச்சிகளை தாமே அனுபவிப்பவர்களாக இருக்க வேண்டும்’

### கொழும்புப் பாடசாலைகளின் கலைவிழாவில் கல்வி இலாகா நிரந்தரக் காரியதரிசி கருத்து

ஈழத்தில் கலைத்துறைக்கு யோகம் பிறந்து விட்டது. மறுக்க முடியாது இதை. குறிப்பாகப் பாடசாலைச் சிறார்களிடையே கலை உணர்ச்சி பொங்கிப் பிரவகிக்க ஆரம்பித்திருக்கிறது. இதைக் கடந்த வாரம் நிதர்சனம் கண்டோம். நீர்கொழும்பு வட்டாரக் கொழும்புப் பிரிவுப் பாடசாலைகளின் கலை விழா ஒன்றை இப்பகுதி வித்தியாதரிசகர் திரு தி. மாணிக்கவாசகர் தயார் செய்து கொழும்பு விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் அளித்தார். தரமான கலை நிகழ்ச்சிகள் ‘திமு திமு’ என்று வந்து பார்த்தவர்களைப் பரவசமடையச் செய்தன.

நாட்டிய நிகழ்ச்சிகளும், நாடக நிகழ்ச்சிகளும், நாட்டிய நாடக நிகழ்ச்சிகளும் விழாவுக்கு கலையூட்டின. கிராமிய நடனங்களானகரக நடனமும், கணபதி வித்தியாலயத்தின் காவடி நடனமும், பரத நாட்டியப் பிரிவைச் சேர்ந்த நடேச நடனமும் ‘டப்பாங் கூத்து’ வகையைச் சேர்ந்த “ஜலக் ஜலக்” நடனமும் குறிப்பிடத்தக்கவை.

கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தின் இரண்டாவது நிகழ்ச்சியான ஸ்ரீ வள்ளி நாட்டிய நடனம் அபாரமாக இருந்தது.

ஆடியவர்கள் காட்டிய பாவங்களும் பாடியவர்கள் காட்டிய பெருகு நிகழ்ச்சியை நெஞ்சில் பதிய வைத்தன. பயிற்சி அளித்த நடன ஆசிரியர்கள் பாராட்டுக்கு உரியவர்கள்.

‘அவன் அமரன்’ என்ற நாடகம் பாடசாலை மாணவர்களின் நடிப்புத் திறமையும் பேச்சு வன்மையும் நன்கு புலப்படுத்தியது. நடித்த அத்தனை மாணவர்களும் கைதேர்ந்த தொழில் முறை நடிகர்களைப் போலவே நடித்தார்கள்.

கலையை ரசிகர்கள் மட்டும் அனுபவிப்பதானால் அது வளரவும் முடியாது; சிறப்படையவும் முடியாது. கலைஞர்களே அதில் உண்மையான ஈடுபாடு காட்ட வேண்டும். தம்முடைய கலை நிகழ்ச்சியைத் தாமே ரசிக்கத் தெரிந்தவனுக்கே கலைஞன் இருக்க வேண்டும். அப்போது தான் தன்னுடைய நிகழ்ச்சியில் நிறைவு கண்டால் பூரிப்படைந்து மேலும் சிறப்பாக நிகழ்ச்சியை அவனால் நடத்த முடியும். அதே போலக் குறை கண்டாலும் அதைத் திருத்திப் பின்னர் திருத்தமாகச் செய்ய வாய்ப்பு ஏற்படும்.

இதே கருத்தை கலை விழாவுக்குத் தலைமை வகித்த கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எச். ஜினதாசா தெரிவித்தார்.

அவர் கூறினார்:-

“சாதாரணமாக நடனமாடுபவர்கள் நடனம் ஆடும்பொழுது தாங்கள் அதை அனுபவிப்பதில்லை. இங்கு நடைபெற்ற நடனங்களை ஆடிய பிள்ளைகள் தாங்களும் அனுபவித்து எங்களையும் அனுபவிக்க வைக்கப் பார்க்கும்போது என் மனம் மிகவும் மகிழ்ச்சியடைகிறது. இங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகள் எல்லாம் உயர்ந்த தரத்தினவாய் இருந்ததை இட்டு அப்பிள்ளைகளையும், அவற்றைத் தயார் செய்த ஆசிரியர்களையும் நான் வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

“இப்படிப்பட்ட சிறந்த கலைவிழாவில் கலந்து கொள்ள சந்தர்ப்பமளித்ததற்காக இவ்விழாவைத் தயார் செய்த பகுதி வித்தியாதரிசகர் திரு தி. மாணிக்கவாசகரையும் நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்”

திரு. தி. மாணிக்கவாசகர் பேசும்போது, இப்பகுதி ஆசிரியர்களும், மாணவர்களும் எமக்களித்த ஒத்துழைப்பும், அன்பும் நான் கடமையாற்றிய வேறு எப்பகுதியிலும் கிடைத்ததில்லை. இதற்காக நான் மிகவும் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இவ்விழா நிகழ்ச்சிகளுக்கு மத்தியஸ்தம் வகிப்பதற்காக வந்திருக்கும் செல்வி பத்மினி தநாயகா, திருமதி பூரணேந்திரா, திருமதி சங்கரலிங்கம் ஆகியோருக்கு எமது நன்றியும், கடப்பாடும் உரியனவாகுக” என்று கூறினார்.

இக் கலை விழாவில் பன்னிரண்டுக்கு மேற்பட்ட பாடசாலைகள் நடனம், நாடகம் என்பவற்றில் பங்குபற்றின. முடிவுகள் வருமாறு:-

**நடனம்**

முதலாமிடம்:- கரக நடனம். விவேகானந்த வித்தியாலயம், கொழும்பு.

இரண்டாமிடம்:- நடேச நடனம். அர்ச் அன்னம்மாள் பாடசாலை, கொட்டாஞ்சேனை.

மூன்றாமிடம்:. ஜலக் ஜலக் நடனம். மட்டக்குளியா அரசினர் முஸ்லிம் பாடசாலை.

**நாடகம்**

முதலாமிடம்: ‘அவன் அமரன்’. கதிரேசன் கல்லூரி, கொட்டாஞ்சேனை.

இரண்டாமிடம்: ‘விதியின் சதி’. அர்ச். செபஸ்தியான் ஆங்கிலப் பாடசாலை, கொழும்பு.

கலை விழாவில் பங்குபற்றிய ஏனைய பாடசாலைக்கு பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. சில பாடசாலைகள் அந்தப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டன. தங்களுடைய பாடசாலைகளின் நிகழ்ச்சிகளுக்கு வெள்ளிக் கிண்ணப் பரிசு இல்லாமல் கடதாசியில் பாராட்டி எழுதித் தருவதில் என்ன பயன் என்று அந்தப் பாடசாலை அதிபர்கள் கருதினார்களோ என்னவோ! இவர்களுக்கு வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதிக்கும் பண்பு அதாவது ஸ்போட்ஸ்மன் ஷிப் (Sportsmanship) அறவே இல்லை என்பதையே இது குறிக்கிறது. வளரும் மாணவர்களுக்கு, வருங்காலப் பிரஜைகளுக்கு ஆசிரியர்கள் காட்டும் முன்மாதிரி இதுதானென்றால் இவர் [illegible] மாறுதிக்கும் கல்வி இலாகாவை என்னென்று சொல்வது சை! கேவலம்.

திரு ஜினதாசா வெற்றிபெற்ற பாடசாலைகளுக்கு வெள்ளிக் கிண்ணங்கள் பரிசு வழங்கினார். இறுதியில், விழாக் காரியதரிசி திரு அ நாகராசா நன்றியுரை கூறினார்.

—சிங்கம்


★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும்
சிறந்த பாவனையிலும்
உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுண் பாவாடை கிமோனோ முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம்

கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன் மால்ஸ்,

26, கெய்ஸர் வீதி, கொழும்பு.


# பூவரசம் பூ!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

நான் ஒரு தொழிலைத் தேடு முன் மங்கையர்க்கரசிக்கு ஒரு தொழில் தேடித் தருவது அவசியம் என்று அவனது குடும்ப நிலை சொல்லியது. அவளுடைய தராதரம் எஸ். எஸ். ஸி. யாக இருந்தும், அவளுக்கு கம்பனியில் ஒரு இடம் எடுத்துக் கொடுத்தேன். அதைத் தொடர்ந்து எனக்கும் ஹட்டனில் ஒரு வேலை கிடைத்தது.

காலதேவன் கண்ணை மூடிக் கொண்டு ஓடுகிறான். மனித இனம் அவனைத் தொடர்ந்து ஓடுகிறது. எல்லோரும் எக்காலமும் ஒரே பாதையில் ஓட முடியாததால் கிளைப் பாதைகளுக்கும் தாவ வேண்டியிருக்கிறது. சிலர் மீண்டும் சந்திக்கிறார்கள். சிலர் சந்திப்பதேயில்லை. இடைவழியில் எத்தனையோ இன்பங்கள், துன்பங்கள், மாற்றங்கள், ஏமாற்றங்கள்.........

தங்கமே! ரத்தினமே! என்று நாள் தவறாமல் நான் கடிதம் எழுதிய காலம் போய், பொன்னே! பவளமே! என்று அவள் தொடர் கடிதங்கள் தீட்டிய காலம் போய், மாதம் ஒரு கடிதமாவது என் மங்கையர்க்கரசி எழுத மாட்டாளா என்று நான் நெட்டுயிர்க்கும் காலம் ஒன்று வந்தது.

விடுமுறை காலம் என்று வந்தால்—நான் அவளை அவளோடு தேடி வீட்டுக்கு வந்தால்—‘எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது, மாஸ்டர், இன்னொரு நாளைக்கு வாருங்கள்’ என்று சொல்லும் அளவுக்கு ஒரு படுபாதகமான காலம் வந்தது.

சம்பளையில் அவளோடு படிப்பிக்கும் எனது நண்பன் ஒருவனுக்கு நான் தலையில் கைவைத்து ஒரு கடிதம் எழுதினேன். அவன் பதிலுக்குக் கடிதம் எழுதவில்லை. ஒரு காட் மட்டும் போட்டிருந்தான். அதில், “மங்கையர்க்கரசியை மறந்து விடுங்கள்” என்று மட்டும் இருந்தது.

எனது நிலையில் உள்ள ஒருவனுக்கு எவ்வளவு ஆத்திரம் பற்றி எழும்? எனது சினம் நண்பன் மேல் பாய்ந்தது—கடித மூலம்! எனது இதயத்தில் இடம் பெற்ற மங்கையர்க்கரசியை மறந்து விடச் சொல்ல இவன் யார்? இந்த அயோக்கியனுக்கு என்ன அதிகாரம்?

நண்பன் பதில் எழுதினான். அதிகமில்லை. தான் பாடசாலை விளையாட்டரங்கில் கண்டெடுத்ததாக ஒரு கடிதத்தையும் அனுப்பியிருந்தான். அது மங்கையர்க்கரசியால் அங்குள்ள இன்னொரு ஆசிரியனுக்கு எழுதப்பட்ட கடிதம்—நேசக் கடிதம், பாசக் கடிதம், ஆசைக் கடிதம்!

கள்ளி!

“மங்கையர்க்கரசி! இத்துடன் வரும் உனது கடிதத்தைக் கண்டு பதறுதே. இனியாவது உன் பாதையை மாற்றிக் கொள். கொள்கையைத் திருத்திக் கொள். உன்னை இன்னமும் எனது மனைவியாக ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு நிலையில் நான் இருக்கிறேன்”

எனது கடிதத்துக்கு அவள் தந்த பதில்—

மௌனம்!

கடிதங்களைக் கத்தரித்துக் கொண்டேன். எண்ணங்களை எடுத்துக் கொண்டேன். ஆசைகளை அடக்கிக் கொண்டேன். ஆனால் என் வாழ்வில் ஒரு சலனத்தை உண்டு பண்ணி நெஞ்சத் திரையில் கொலுவேறிய சித்திரத்தை அழிக்க வல்லவர் யார்?

ஒன்று!

அவளுடைய நடவடிக்கைகளைத் தூர இருந்து அவதானித்துக் கொண்டு வந்தேன். அவளுக்காகக் காத்திருக்கவும் செய்தேன்—கல்யாணம் செய்யாமல்!

மங்கையர்க்கரசியை அந்த ஆசிரியன் ஏமாற்றி விட்டானாம். அவள் வேலையை விட்டு விட்டு யாழ்ப்பாணம் திரும்பி விட்டாளாம். பிறகும்—

கேள்விப்பட்டேன்!

●

மணி அடித்தது.

மாணவர்கள் புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு ஓடினார்கள். நானும் மங்கையர்க்கரசியின் கடிதத்தை மடித்துக் கையில் பிடித்துக் கொண்டு வீடு நோக்கி நடந்தேன்.

வீட்டு வாசலில் எனது வருகைக்காகக் காத்திருந்த எனது மனைவி புத்தகங்களை வாங்கிக் கொண்டே கேட்டாள்:

“என்ன ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?”

“மங்கையர்க்கரசி — அவள் தான்—கடிதம் போட்டிருக்கிறாள்” என்று கடிதத்தை பத்மாவிடம் கொடுத்தேன்.

“மங்கையர்க்கரசி! அன்றைக்கு வெலிங்டன் தியேட்டரில் வாழ்க்கை என்ற படம் பார்த்ததிலிருந்து நீ என்னைச் சுகுமாரன் என்று அழைத்து வந்தாய். நான் உன்னைக் கண்ணம்மா என்று அழைத்து வந்தேன். ஆனால் உனது கோணல் புத்தியினால் அந்தச் சுகுமாரன் செத்து விட்டான். என்னைப் பொறுத்தமட்டில் கண்ணம்மாவும் அப்படித்தான். இன்றைக்கு நீ யாரோ, நான் யாரோ.”

பத்மா கடிதத்தைப் படித்து விட்டு, எனது கரத்தைப் பற்றி வீட்டுக்குள் அழைத்துச் சென்று, உட்கார வைத்து, எனது நெற்றியில் அரும்பிய வெயர்வை முத்துக்களைத் தன் முந்தானைச் சேலையால் துடைத்து விட்டாள்.

“இவளுக்கு யார் போய் மங்கையர்க்கரசி என்று பெயர் வைத்தது?” என்று கேட்டாள் பத்மா.

“பூவரசம் பூவைப் பார்த்திருக்கிறாயா?” நான் கேட்டேன்.

“ஆமாம்”

“அது அவ்வளவு அழகாக இல்லை. நல்ல மணம் இல்லை. அதை மாலை கட்ட எடுப்பதில்லை. சுவாமிக்குச் சாத்த பயன்படுத்துவதில்லை. யாரும் கூந்தலில் சூட்டிக் கொள்வது கூட இல்லை. இருந்தும் அதற்குப் பெயர் வைத்திருக்கிறார்களே பூவுக்கு, அரசு— பூவரசம் பூ என்று!” என்று சொன்னேன் நான்.

பத்மா சிரித்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

## கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

## ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை) மொடர்ன் (பதுளை)

"சத்தியமே ஜெயம்"



இந்த மணி வாக்கை ஒரு பரம்பரைத் திருடன் கடைப்பிடிக்கும் போது அவனை

"அதிசயத் திருடன்"

என்றுதானே அழைக்க வேண்டும்!

அவன் மீண்டும் திருடினனு!

உடனே திருந்தி விடுகின்ருனு?

சட்ட திட்டங்களுக்குப் பணிந்தானு?

அவன் காதலித்த பூக்காரி கௌரியின் உறவு என்னுனது?

## விடைதானே வேண்டும்! இன்றே கண்டுகளியுங்கள்.

ஜெமினி கணேசன்,

சாவித்திரி, டி.எஸ். பாலையா,

கே. ஏ. தங்கவேலு,

டி. பி. முத்துலட்சுமி,

வி. நாகையா, தனம், நாராயணராவ்,

கே. என். கமலம், பேபி ராஜகுமாரி,

ஏழுமலை

முதலியோர் நடித்த



# ★ அதிசயத் திருடன் ★

"திருடர்களின் பரம்பரையிலே பிறந்த, ஒருவன் செய்யும் திருட்டுத் தொழிலை நிறுத்த ஒரு அரசாங்கத்தினுலேயே முடியாமல் போய் விடுகிறது. ஆனுல் ஒரு மகானுக்குக் கொடுத்த வாக்கினுல் பொய் பேச மறுக்கும் அத்திருடன் தனக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டதைத் தவிர்க்கவும் பொய் பேச மறுத்து விடுகிறுன். தான் விரும்பும் பெண்ணிற்காகத்திருட்டுத் தொழிலையும் விட்டு விடுகிறுன். அவனின் நேர்மையைக் கண்ட மன்னன் கடைசியில் அவனையே அந்நாட்டின் பிரதம மந்திரியாக்குகிறுர்".

பின்னணி : டி. எம். சௌந்திரராஜன்—சீர்காழி கோவிந்தராஜன்—எஸ். சி. கிருஷ்ணன்—ஸ்ரீ பொன்னுசாமி சுசீலா—ஜிக்கி—ஜமுனுராணி—ஜானகி.

டைரக்ஷன்: பி. புல்லையா

நடனம்: சரோஜா-ராஜேஸ்வரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை [illegible] ஏஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்கமாவத்த, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 ஜூலை 24-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது.